Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 16 30 - 05 - 1994 திங்கட்கிழமை ஓசை 101

30-5-1994

## சதையை அரித்து உண்ணும் பக்டீரியாவால் பரபரப்பு

சதை அரித்து உண்ணும் பக்டீரியா நோயொன்று இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து லண்டனில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந் நோயினால் அண்மையில் புதிதாக இருவர் இறந்துவிட்டதாகவும் இந் நோய் அறிகுறிகளுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஐந்து நபர்கள் சுகமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது சதையை உண்ணும் இப் பக்டீரியா நோய் சில காலமாக இருந்து வருவதாகவும் இவ் வருடம் பிரிட்டனில் ஏழு பேர் இறந்ததும் உலக கவனத்தை இந் நோய் ஈர்த்துள்ளது எனவும், உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்நோய் பரப்பும் கிருமிகளை

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வு பெற்ற அதிகாரிகள் நியமனம்;

# இராணுவ அதிகாரிகள் அதிருப்தி!

## ஏறாவூரில் சிப்பாய் பலி

(கொழும்பு)

ஏறாவூர் பகுதியில் இராணுவப் பதுங்குகுழி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கடந்த வியாழனன்று அதிகாலையில் நடத்திய திடீர் தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நள்ளிரவுக்குச் சற்று பின்னர் அதிகாலை ஒரு மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலில்சந்திரரட்னா என்னும் இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டார்.

## அதிக வளங்களை பயன்படுத்துவதாக குறை

(கொழும்பு)

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை மீண்டும் சேவைக்கு அமர்த்துவது தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மத்தியில் விரக்தியும், குழப்பநிலையும் ஏற்பட்டுள்ளது. இவர்கள் அதிக வளங்களைப் பயன்படுத்துவதாகவும், விருதுகளைப் பெற்றுக் கொள்வதாகவும் தற்பொழுது சேவையில் உள்ள அதிகாரிகள் மட்டத்திலே அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது குறித்து, செய்தி வெளியிட்டுள்ள கொழும்புப் பத்திரிகை, இரு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள், ஒன்பது பிரிகேடியர் தர அதிகாரிகள், இரண்டு கேணல் தர அதிகாரிகள், ஆறு லெப்டினன்ட் கேணல்கள், இருபத்துமூன்று கப்டன்கள், பதினொரு லெப்டினன்ட்கள் ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாதம் ஒன்றிற்கு பத்துலட்ரூபா இத்தகைய அதிகாரிகளினால் செலவாகின்றது எனவும் இரண்டு டசின் அரசாங்கக் கார்கள் இவர்களால் பயன்படுத்தப்படுகிறது எனவும் கனிஷ்ட அதிகாரிகள் தரத்திலுள்ள படையினர் கூறியுள்ளனர்.

இதே வேளை பெரும்பான்மை இராணுவ விருதுகள் இவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் கொழும்பிலுள்ள நிர்வாகப் பிரிவுகளிலேயே கடமையாற்றி வருபவர்கள் எனவும், இப் பதவிகள் சேவையிலுள்ள இளம் அதிகாரிகளால் இலகுவில் நிரப்பப்பட்டு திறமையான முறையில் செயற்படுத்தக் கூடியவை எனவும் கனிஷ்ட அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர். மீண்டும் பதவிக்கு அமர்த்தப்பட்டுள்ள அதிகாரிகள் மிகத் திறமையானவர்கள் எனக் கூறப்படும் கணிப்பு யுத்தப் பிரதேசங்களில் இவர்கள் அளிக்கும் சேவையைப் பொறுத்து கணிப்பிடவேண்டும் எனவும், இவர்களது நியமனத்தால் இளம் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் பாதிப்புற்றுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

## றொனிக்கு நிதி அமைச்சு வழங்கப்படமாட்டாது?

முன்னாள் நிதி அமைச்சர் றொனிடி மெல் ஐ. தே. கவில் இணைந்து பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவி வழங்கப்பட்டாலும் கூட நிதி அமைச்சுப் பொறுப்பு அவருக்கு வழங்கப்படமாட்டாது எனக் கூறப்படுகிறது.

ஜே. ஆர் அரசில் பதினொரு ஆண்டுகளாக நிதி அமைச்சராக இருந்த றொனிடி மெல் ஐ. தே. கவில் மீண்டும் இணைந்து கொண்டிருப்பதையடுத்து அவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியும், அமைச்சுப் பொறுப்பும் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவது தெரிந்ததே

## தமிழக சட்டசபை இடைத்தேர்தல் திருப்பெருந்துறை அ.தி.மு.கவிற்கு

(சென்னை)

திருப்பெருந்துறை சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் ஆளும் அ. இ. அ. தி. மு. க சுமார் முப்பதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகுதியில் அ.இ.அ.தி.மு.கவின் வேட்பாளரான பெரியசாமி 55730 வாக்குகளையும் வை.கோபாலசுவாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க வேட்பாளரான சந்தசாமி 23,452 வாக்குகளையும், கருணாநிதி தலைமையிலான தி.மு.கவின் ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் டி.கே. நல்லப்பன் 20,447 வாக்குகளையும், காங்கிரஸ் கட்சி 12,371 வாக்குகளையும் பெற்றுள்ளனர் இத்தொகுதியில் காங்கிரஸ் கட்சி பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்கள் உட்பட பலரும் கட்டுப்பணத்தையும் கோட்டை விட்டுள்ளனர்.

இத் தொகுதியில் கடந்த தேர்தலின் போது அ இ அ தி மு.க இரண்டாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மட்டும் வெற்றி பெற்றது சுட்டிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொடி எழல் பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நாளை முதல் எதிர் வரும் திங்கட்கிழமை வரை (31 5-94 முதல் 6 6-94 வரை) கல்விக் கோட்டங்கள் வாரியாக நடாத்த இருக்கின்ற கொடி எழல் பற்றிய கலந்துரையாடல் தொடர்பாக இன்று முற்பகல் பதினொரு மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது ஊர்காவற்துறை வேலணை கல்விக்கோட்டங்களுக்கு சென்ஜோன்ஸ் அக்கடமியிலும், யாழ்ப்பாணம் நல்லூர்க் கோட்டங்களுக்கு யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்திலும், தென்மராட்சி கோட்டத்திற்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும், சங்கானை கோட்டத்திற்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் சண்டிலிப்பாய் கோட்டத்திற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பளை கோட்டத்திற்கு மகாஜனாக் கல்லூரியிலும், உடுவில் கோட்டத்திற்கு இராமநாதன் கல்

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என நம்புகிறோம்

- நரசிம்மராவ்

(டில்லி)

இலங்கையின் இனப்பிரச் ...

கொழும்பிலிருந்து மாதமிரு முறை வெளியிடப்படும் பதி ...

## பின்தங்கிய பாடசாலை

கூறப்படுகிறது-

ஜே. ஆர் அரசில் பதினொரு கப்படலாம் என்று எதிர்பார்கப்படுவது தெரிந்ததே

சொத்தி உபாலி விசாரணையில்

# போதைவஸ்து வியாபாரி குறித்து தகவல் கிடைத்தது

[கொழும்பு]

பிரபல போதைவஸ்து வியாபாரிகளின் பெயர்களும் அவர்கள் நடவடிக்கை தொடர்பான தகவல்களும், சொத்தி உபாலி குறித்த விசரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக குற்ற புலன் விசாரணை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்-

தொடர்ந்து சொத்தி உபாலியிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆயுதம் தனக்கு வழங்கியவர் மற்றும் புகலிடம் கொடுத்த பலர் தொடர்பான தகவல்கள் தமக்கு கிடைக்கப்பட்டு வருவதாகவும் அவ் உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்-

# தலைமன்னார் பகுதியில் 9 தமிழ் இளைஞர் கைது

[மன்னார்]

தலைமன்னார் பகுதியில் இரு மணவர்கள் உட்பட ஒன்பது இளைஞர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்-

தலைமன்னார் கிராமத்திற்கு வந்த கடற்படையினர் றொபேர்ட் கூஞ்ஞு, கிறிஸ்து ராஜன்குரூஸ் எமில்லம்பேர்ட் ஜெமில் லேயம், அகஸ்டின் சகாயம் லேயம்லீமா, சவன் கூஞ்ஞு றெஜினோல்ட், சுரேஸ் எஸ். யூட் ஆகிய ஒன்பது பேரையும் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்-

இவாகள் ஒன்பது பேரும் கைதாகி எட்டு நாட்களாகியும் இதுவரை விடுவிக்கப்படாதது குறித்து பெற்றோர் செரிதும் கவலையடைந்துள்ளனர்.

# சிறுபான்மையினர் வாக்கிலேயே தேர்தல் வெற்றி தங்கியுள்ளது

## 'லங்காதீப' தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவு சிறுபான்மையினரின் வாக்குகளிலேயே தங்கியிருக்கிறது என 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது சிறுபான்மையினர் வாக்குகள் எந்தக் கட்சிக்கு கிடைக்கும் என்பதிலேயே அக்கட்சியின் வெற்றி தங்கியுள்ளது என மேலும் அது தெரிவிக்கிறது

எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்களின் வேண்டுகோள்கள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புகளை உதாசீனம் செய்யக்கூடாது வடக்கு-கிழக்கு மக்களின் கணிசமான ஒத்துழைப்பு வெற்றிக்கு தேவைப்படுவதாகவும் வடக்கு-கிழக்கு மக்களின் ஆதரவை யார் பெறுகின்றார்கள் என்பதிலேயே வெற்றி தங்கியுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது

இதேவேளை முஸ்லிம் காங்கிரசின் ஒத்துழைப்பும் மலையகத்தில் ஆறு லட்சம் வாக்குகளையுடைய தோட்டத் தொழிலாளர்களுடையதும் ஒத்துழைப்பை பெறுபவர் யார் என்பதே தேர்தலைத் தீர்மானிக்கப்போவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது

(டில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பிற்குள் ஒரு அரசியல் தீர்வு காணப்படும் என்று இந்தியா நம்புவதாக இந்தியப்பிரதமர் பி.வி நரசிம்மராவ் கூறியுள்ளார்

கொழும்பிலிருந்து மாதமிரு முறை வெளியிடப்படும் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் அயல் நாடுகள் அமைதியாகவும், வளமாகவும் வாழவேண்டும் என்பதையே இந்தியா எப்போதும் விரும்புவதாகவும் ''பயங்கர வாதத்தை'' சமாளிப்பதில் இந்தியா இலங்கைக்குஒத்துழைப்புவழங்கும் எனவும் குறிப்பிட்டார்

- நரசிம்மராவ்

# புலிகள் பேச தயாராக இருந்தும் அரசாங்கம் தயங்குவது ஏன்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மிகவும் பலம் வாய்ந்த நிலையில் இருந்து கொண்டே தாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எப்பொழும் தயார் எனப் பல தடவைகள் அறிவித்தும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தத் தயங்குவது ஏன்? என தமிழ் எம். பி யொருவர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்

உலகிலுள்ள மிக வலிமை மிக்க கெரில்லா இயக்கங்களில் ஒன்றாக புலிகள் இயக்கம் இன்று இருக்கிறது வடக்கினை தம் கைவசம் வைத்திருக்கும் நிலையிலும் கூட வடக்கில் ஒரு நடைமுறை அரசாங்கத்தைக் கொண்டிருக்கும் நிலையிலும் கூட தாம் சமாதானத்திற்கு தயார் என புலிகள் அறிவித்துள்ளனர்

இந்த விடயத்தில் அரசின் பதில் என்ன? பிரதான எதிர் கட்சியின் பதில் என்ன? நாங்கள் வார்த்தைகளைச் செவிமடுத்து வந்திருக்கிறோம் ஆனால் வார்த்தைகளுக்கு ஈடான நடவடிக்கை எதுவுமில்லை

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இனப்பிரச்சினைக்கு தீர்வாக இணைப்பாட்சித் திட்டத்தை, அத்தகைய தீர்வு ஒன்று முன்வைக்கப்படமுடியுமானால் தாம் பரிசீலனை செய்யத் தயார் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்திருக்கும் நிலையிலும் கூட அரசதரப்பினர் பக்கம் பந்து இப்போதும் இருந்துகொண்டிருப்பதைபார்க்கிறோம் என்றார்.

## 30,000 ரூபாவை பறிகொடுத்தார்

[தென்மராட்சி]

மீசாலைப் பகுதி வாலிபர் கொழும்பில் தெகிவளைப் பகுதியில் பிட் பொக்கட் ஆசாமிகளிடம் தனது பணத்தைப் பறிகொடுத்தார்-

பணம் பறி கொடுத்தவர் வாய் பேச மாட்டாதவர் ஆவார்- இவர் கடந்த வாரம் கொழும்பிலிருந்து தெகிவளைக்கு இ போ. ச. பஸ்ஸில் சென்று கொண்டிருக்கையில் ஏற்பட்ட சன நெரிசலின் போதே தனது பணத்தைப் பறிகொடுத்தார்- இவ் வாலிபர் பறிகொடுத்த பணத்தின் பெறுமதி 30,000 ரூபா ஆகும்-

[86]

# பின்தங்கிய பாடசாலை ஆசிரியர் நியமனம்

## விண்ணப்பங்கள் கோரப்படும்

[கொழும்பு]

இலங்கை முழுவதிலுமுள்ள பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கு நேரடியாக அப்பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் இப்பாடசாலைகளின் பெயர்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன

விண்ணப்பதாரிகளிலிருந்து ஆசிரியர்களை தெரிவு செய்யும் போது குறித்த பாட

(5 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு இன்று தேவை ஜனநாயகமே

(கொழும்பு)

நாட்டுக்கு இன்று தேவையானது ஓர் முழுமையான ஜனநாயகமே அதன் மூலம் மக்களின் உரிமைகள் பெற்றுகொள்ள முடியும் என 'லங்கா தீப' பத்திரிகை ஆசிரியரின் அரசியல் கட்டுரை தெரிவித்துள்ளது

ஜனாதிபதி ஆட்சிமுறை அகற்றி அரசியல் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல் மற்றும் ஜனாதிபதி, பிரதம மந்திரி தெரிவு போன்ற வற்றிலும் மாற்றம் ஏற்படுத்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

சூரிய கந்த எலும்புக் கூடு விவகாரம்

# தேவையான இராணுவத்தினரை விசாரணைக்கு ஆஜராக்க உத்தரவு

[கொழும்பு]

எம்பிலிப் பிட்டியபகுதியிலுள்ள சூரியகந்த என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய 30 இராணுவத்தினரும் உடனடியாக விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டும் என குற்றவியல் திணைக்களம் சிறிலங்கா இராணுவத் தளபதிக்கு இரண்டாம் தடவையும் தெரியப்படுத்தியுள்ளது. இதனையடுத்து-

சூரியகந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பாக நடைபெறும் விசாரணைக்கு தேவையான இராணுவத்தினரை உடனடியாக விசாரணைக்காக ஆஜர் ஆக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு இராணுவ அதிகாரிகளுக்கு கட்டளையிட்டுள்ளது

மேற்கண்டவாறு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:

பாதுகாப்பு படைகளின் தரைமற்றும் பீரங்கிப் படைகளைச் சேர்ந்த இந்த 30 பேரும் மேற்படி சம்பவம் நடைபெற்ற வேளையில் எம்பிலிப்பிட்டிய பகுதியில் கடமையாற்றியோர் என இரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: சூரிய கந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள்தொடர்பாக பொலிசைச் சேர்ந்த 20 பேர் உட்பட 50 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பகுதியில் உள்ள தொலைக்காட்சி ஒலிபரப்புக் கோபுரம் ஒன்றில் பாதுகாப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

27-5-94 அன்று கஸ்தூரியார் வீதிக்கும் த.பே.ச.மே. நிறுவன காரியாலயம், தாவடிக்கும் இடையில் யாழ் வர்த்தகவங்கி இல: 699432 கொண்ட காசோலை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் அல்லது சீமேந்து கூட்டுத்தாபன காரியாலயம் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (8410)

## 'அக்கரைச் சீமையில்' நாவல்

இங்கிலாந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப் பெண்ணுக்கு என்ன நடந்தது? 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை உண்மைக் கதைபோலச் சொல்கிறார். பூபாலசிங்கம் புத்தகசாலை. (8411)

## தவறிவிட்டது

யாழ் பழைய பஸ்தரிப்பு நிலையத்திற்கும் நாயன்மார் கட்டு ஆடியபாதம் வீதிக்கும் இடையில்- 23.5.94 அன்று எனது மூக்குக்கண்ணாடி உறையுடன் தவறிவிட்டது தயவு செய்து எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (8416)

## கழக போட்டிகள்

(தொல்புரம்)

ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நடப்பு வருடத்திற்கான மேற்படி விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் அவ்வப் பகுதி கிராமசேவை அலுவலர்கள் ஊடாகபோட்டிகளில்பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் மூலம் பெறப்படுவதாகத் தெரியவருகிறது. (41)

## விண்ணப்பம் ஏற்பு

(தொல்புரம்)

கடந்த சில நாட்களாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கான விண்ண...

# நினைவு கூருகின்றோம்... 30.05.1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கிரான்குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**குமார்** (நடராசா இருஷ்ணகுமார்-இருதயபுரம் மட்டு)

**வசந்த்** (இராஜேந்திரன் அருளானந்தராசா - அமிர்தகழி மட்டு)

1987ஆம் ஆண்டு யாழ்- நாவற்குழி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நிசாந்தன்** (நடராசா இராசகுலேந்திரன் -பரந்தன் கிளிநொச்சி)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப்: வாசன்** (நடராசா சிறிகாந்தன் - மடுக்கோயில் மன்னார்)

வடமராட்சியில் சிறிலங்காப்படையினர் 5 ஆவது நாளாக ஒபறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது தொண்டமானாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

**கஜன்** (ரவி செல்வக்குமார் பற்றிமாவீதி, பண்டத்தரிப்பு யாழ்)

இதே நடவடிக்கையின்போது உடுப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

**வடிவு - லோகன்** (கனகசபை லோகேஸ்வரன் சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய

※ **மெய்** (க. மெய்யழகன் தம்பலகமம், திருமலை.)

சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று வயதுக் குழந்தை.

1988ஆம் ஆண்டு நிலாப்பொலவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**விரலி கஹற** (வீரக்குட்டி பேரின்பநாதன் மூதூர் திருகோணமலை)

1989ஆம் ஆண்டு மாமுனையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். முத்து** (சுந்தரலிங்கம் ஞானவேல் மானாங்கனை வல்வெட்டித்துறை)

இதே சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கஜன்** (கனகசபை தர்மராசா கரணவாய், கரவெட்டி யாழ்)

**தரன்** (குணரத்தினம் ஞானசேகரம் ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை யாழ்)

**அசோக்** (கந்தசாமி ஜெயந்தன் அராலி, வட்டுக்கோட்டை யாழ்)

யாழ் நீர்வேலியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சிவனேசன்** (சபாரட்ணம் சிவனேசன் நீர்வேலியாழ்)

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

**லெப் நவம்** (தம்பையா தயாபரன் கொக்குத்தொடுவாய் மணலாறு)

**மயூரன்** (பத்மநாதன் சந்திரநாதன் விசுவமடு முல்லைத்தீவு)

**கப்டன் பிரகாஷ்** (இலங்கேஸ்வரன் சங்கர்வவுனியா)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத வெடிவிபத்தில் விழுப்புண்ணடைந்து எமைப் பிரிந்த,

**மேஜர் கருளி** (கந்தசாமி சிறிதரன் சுதுமலை வடக்கு மானிப்பாய்)

வவுனியா குடியிருப்புப் பகுதிகளிலிருந்து சிறிலங்காப்படையினரால் கடத்திச்செல்லப்பட்டுக் காணாமற் போன பல தமிழிளைஞர்கள்,

1992ம் ஆண்டு முல்லைத்தீவு 5-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் பிறேமச்சந்திரன்** (அழகையா தவேந்திரன் 16/5, சிவபுரி திருமலை)

**லெப். மாறன்/சுலோஜன்** (பாக்கியதுரை தயாளசீலன் மூதூர் திருமலை)

**கப்டன் நந்தன்** (செல்லையா சந்திரன் மாங்குளம் முல்லைத்தீவு)

**2ம் லெப். சடையன் சுதா** (குருசாமி யோகபாலன் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

**முல்லைவேந்தன்** (அந்தோனிப்பிள்ளை அன்ரன் ஜெயக்குமார் சிலாவத்தை முல்லைத்தீவு)

**குலேந்திரன்** (கனகரத்தினம் சாந்தகுமார் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

**வெற்றி** (செல்வசீலன் புண்ணியராஜ் ஓமந்தை வவுனியா)

**லெப். மகிந்தன்/மைந்தன்** (முருகேசபிள்ளை சிறிதரன் பரந்தன் கிளிநொச்சி)

**2-ம் லெப்.சிவம்** (துரைச்சாமிராஜேந்திரன் ஜெயந்திநகர் கிளிநொச்சி)

**கப்டன் குட்டி/அன்பு** (ஐயம்பிள்ளை சிவகுமார் மாசியப்பிட்டி சண்டிலிப்பாய் யாழ்)

**லெப்.ராஜன்** (அன்னலிங்கம் மதியழகன் உடுவில் தெற்கு, மானிப்பாய் யாழ்)

யாழ், வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நெடியவன்/வாசன்** (இரட்ணம் சுதாகர், தம்பலகாமம், திருமலை)

**மேஜர் எழிலமுதன்-சுதன்** (நமசிவாயம் உமாசுதன்- ஆனைக்கோட்டை-யாழ்)

**கப்டன் வீரத்தேவன்-பியூஸ்மாக்** (துரைராஜா சிவலிங்கம் -அரியாலை-யாழ்)

**கப்டன்வானவாணன்-கெனடி** (பத்மநாதன்மயூரன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு-யாழ்)

**கப்டன் செல்வன்** (செல்லத்துரை தெய்வசபாநாதன், புலோப்பளை மேற்கு, பளை)

**லெப். நித்தி புகழேந்தி** (சிவசுப்பிரமணியம் சம்பூரணநாதன், பண்டத்தரிப்பு, யாழ்)

**லெப். இறையன்பன்-யோன்சன்** (திருச்செல்வம் ரவிச்சந்திரன், புங்குடுதீவு, யாழ்)

**வெற்றியரசன்-ஜெயந்தன்** (கிருஷ்ணபிள்ளை நாகலிங்கம், ஐயனார் கோயிலடி, சண்டிலிப்பாய்)

**இன்பன்** (கணேசபிள்ளை துஷ்யந்தன், கோப்பாய் வடக்கு, யாழ்)

**வேல்மாறன்** (ஐயாத்துரை மனோகரன்-காரைநகர்)

**லெப். புகழேந்தி-லம்பா** (பொன்னுத்துரை மதனசிங்கம்- அளவெட்டி வடக்கு, யாழ்)

யாழ், தச்சன்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**நறுகுணம்-நிரோஜன்** (சண்முகநாதன் யோகநாதன்- நல்லூர், யாழ்)

யாழ், வலிவடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இளம்பெண்கள், இளைஞர்கள், முதியோர்கள், சிறுவர்கள் மற்றும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை பொறியியலாளரான பெண் உட்பட கொல்லப்பட்ட 23 பேர்.

1993ஆம் ஆண்டு கறுக்காய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**லெப் ரவிக்குமார்** (சிவகுரு யுவராஜா, கொக்கட்டிச்சோலை, மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

※ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்;**

(சி-9544)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு;

15-4-1970

வீரச்சாவு:

# நீ மீண்டும் வருவாய்



நீ பிறந்த திருமலை மண்ணின் ஒவ்வொரு
அங்குலமும் அவலங்களில் சிக்கி
அலையுண்டு தவித்தது.
86-ஆம் ஆண்டு புலிவீரர்களின் பயிற்சிப்
பாசறை உன்னை
வீரனாய் இனங்கண்டது. புலித் தோழர்கள் உன்
விசுவாசத்தை அடையாளங்கண்டார்கள்.
அதனாலேயே மூத்த தளபதிகளின் மெய்ப்பாது
காவலனாய் என்றும்
தோளோடு தோள் நின்றாய்.
அருமை நண்பா ...
நீ கால்பதித்துக் களமாடிய சம்பவங்களும்,
நீ புரிந்த சாதனைகளும்
எப்பொழுது நினைத்துக் கொண்டாலும் மனதில்
நிறைந்து எங்கள் வீரத்தை

தழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

1954 ஆம் ஆண்டிற்குப்பின் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் சம்பந்தமான படிவங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வது நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது எனவும், தற்போது மேற்படி படிவங்கள் யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் பணிமனைக்கு வந்து சேர்ந்ததை அடுத்து இவற்றிற்கான விண்ணப்பங்கள் ஏற்கும் பணிகள் நடைபெற்றுவருவதாகவும் தெரியவருகிறது.

(41)



30-5-1992

## கப்டன் வீரத்தேவன்/பியூஸ்மார்க்

**துரைராசா சிவலிங்கம்**

அரியாலை

விடுதலை கானம் பாடியின் நிகழ்வில்
போராளிகள், நண்பர்கள், பொதுமக்கள்
யாவரும் கலந்து கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கிறோம்.

109, 3ம் குறுக்குத் தெரு,
மணிப்புரி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

(8417)


- உங்கள் மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதா?
- புதிதாக ஒரு மின்பிறப்பாக்கியை அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?
- மின்விநியோக வேலைகள் செய்ய வேண்டியுள்ளதா?

கவலை வேண்டாம்.

- நீண்டகால உத்தரவாதத்துடன் நல்லமுறையில் மின்பிறப்பாக்கிகளைத் திருத்திக் கொள்ளவும்,
- புதிய மின்பிறப்பாக்கிகளை அமைத்துக்கொள்ளவும்,
- மின் விநியோக வேலைகளை திருப்திகரமாகவும், திறமையாகவும், செய்து கொள்ளவும்,

நாடுங்கள்:- **சக்திப் பகுதி**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி,
தமிழீழம்.

"உங்கள் தேவைக்கு- எங்கள் சேவை"

(சி-9525)




## மேஜர் பிறேமச்சந்திரன்

எம் உயிர்த்தோழனே பிறேமச்சந்திரா!
காலநதியலைகள் கரைத்துவிட முடியாத
கற்பாறையாய் நீ நிமிர்ந்து நிற்க ...
ஈராண்டு கழிந்து போனது.
இதயம் கனக்கிறது.
காலத்தால் அழியாத தேசத்தின் புதல்வனே ...
அஞ்சலி செலுத்துவதற்காக உனது கல்லறை நோக்கிக் கால்கள் நடக்க-
இதோ எம் இதயத்தில் உன் நினைவு மலர்கள் நறுமணம் பரப்புகின்றன.
ஆக்கிரமிப்புப் புயலின் அதிவேக வீச்சில் அகப்பட்டு எங்கள்
தேசத்தின் சின்னப்பூக்கள் உதிர்ந்து விழுந்தபோது-
இதயத்தில் சுமக்கும் இனிமையாய் இருந்த எங்கள் மக்களின்
வாழ்க்கை - முதுகில் சுமக்கும் மூட்டையாக மாறிய போது-
உனக்குள் பிறந்தது வேகம்.
அந்நியரைப் பொடிப் பொடியாக்க எழுந்த வேகம்;
அதுவே வேங்கைகளின் ராகமாய்
புலிகளின் தாகமாய்
உனக்குள்ளேயும் ஊற்றாகிப் பிரவாகமெடுத்தது!
சொந்த பூமியை ஆக்கிரமித்துக் கொண்ட அந்நிய வெறியர்களின்
கால்களில் கீழ் எங்கள் வாழ்க்கை மிதிபட்டபோது -

எப்பொழுது நினைத்துக் கொண்டாலும் மனதில் நிறைந்து எங்கள் வீரத்தை
உரமேற்றும்.
தமிழீழமெங்கும் - குச்சவெளி என்ன ... மூதூர் என்ன...
எல்லா இடமும் உன் கால் பதித்தாய்.
சேறும் சுரியும் ஆறும்-. வயலும்- ஏன் இராணுவம் கூட-
உன் பயணங்களைத் தடைசெய்ய நீ விடவில்லை,
ஏனெனில், உன் நினைவு
முழுமையிலும் நிறைந்திருந்தவை உன் மக்களும் அவர்களுடைய சுதந்திர
விடிவும் தான்.
சிங்கள இராணுவத் துப்பாக்கி இந்திய இராணுவத்தின்
கைகளில் மாறியபோது எங்கள் வீரர்கள் இந்தியப் படையைத் திக்குமுக்காட வைத்தனர்.
தமிழீழத்தில் பல களங்கள் உனது சாதனைகளையும் பதிவு செய்து கொண்டன.
88- ஜனவரியில் திருமலையின் 5-ம் கட்டையில் உள்ள
இலுப்பைக்குளத்தில் இந்தியக் கூலிப் படையினரிடமிருந்து ஒரு பிறன் எல். எம். ஜியும்
வேறு பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட தாக்குதலில், மிகவும் குறுகிய இடைவெளியில்
நின்றுகொண்டு வீராவேசமாகப் போரிட்ட உன் வீரத்தைக் கண்டு இந்திய ஆக்கிரமிப்பாளர்
அசந்துபோய் நின்றது. பிறேமச்சந்திரன் என்ற புலிவீரனுடைய துணிச்சல் மிக்க
வீரத்துக்கோர் முத்திரை பதித்த நிகழ்ச்சி;
உன் வீரத்தை உரைத்துப் பார்த்த விழுப் புண்கள் பல!
நீ சலிப்புற்றாயா? இல்லை மேலும் உரம்பெற்ற வீரத்துடன்
களமாடினாய்.
30-05-92 உன் வீரச்சாவு எம் காதுகளில் இடியாய் இறங்கியது.
முல்லைத்தீவிலிருந்து அலம்பிலை நோக்கிச் சிங்கள ஆக்கிரமிப்பாளன் முன்னேற விடாமல்
தடுத்த போரில் நீ எமைப் பிரிந்து போனாய்.
நிதம் காணுகின்ற முகங்களுக்குள், அமைதி - அடக்கம்-புன்சிரிப்பு
இவற்றுடன் கூடிய உன் முகத்தை நாம் தேடுகிறோம் நண்பனே,
திருமலை மண்ணில் சலசலத்தோடுகின்ற ஆற்றுநீரும்,
ஆற்றங்கரைப் புற்களும் கூட உன்னை - உன் கால்களை - ஸ்பரிசிப்பதற்காக
இன்னும் ஏங்கிக்கொண்டிருக்கின்றன;
ஆனால் - எங்களுக்குத் தெரியும்-
நீ மீண்டும் வருவாய் ...
வேற்றுருவில், வேற்றுயிரில் - அதே தாகத்துடன்-

(சி-9535)

- நண்பர்கள்

# விஞ்ஞானம் O/L

## இரசாயன கணக்கீட்டின் தொடர்ச்சி
## பகுதி A

1. ஒரு சேர்வையில் உள்ள குறித்த மூலகம் ஒன்றின் சதவீதத்தை காணல்

உ+ம்:- யூரியாவிலுள்ள நைதரசனின் சதவீதம் யாது?
யூரியாவின் மூலக் கூற்றுச் சூத்திரம் - $CO(NH_2)_2$
,, மூலக் கூற்று திணிவு - $12+16+2\times14+4\times1$
$= 12+16+28+4$
$= 60$

60g யூரியாவில் உள்ள நைதரசனின் நிறை = 28g

∴ சதவீதம் $= \frac{28}{60} \times 100$
$= 46.6\%$

குறிப்பு:- $\frac{\text{அதிலுள்ள மூலகத்தின் திணிவு}}{\text{மூலக்கூற்றுத் திணிவு}} \times 100$

80g கல்சியம் காபனேற்றில் இருந்து பெறக்கூடிய கல்சியம் ஒக்சைட்டின் திணிவு யாது?

$CaCo_2 \longrightarrow Cao + Co_2$
(சமன்பாடு ஈடு செய்யப்பட வேண்டும்)
$CaCo_3$ இன் மூலக் கூற்றுத் திணிவு = 100g
∴ சமன்பாட்டின்படி
$100g\,CaCo_3$ இல் இருந்து பெறும் Cao = 56
∴ 80g ,, ,, ,, ,, $= \frac{56}{100} \times 80$
$= 44.8g$

### இரசாயன தாக்க வகைகள்

(1) இரசாயன சேர்க்கை தாக்கம்
(அ) இரண்டு மூலகங்கள் அல்லது இரண்டு சேர்வைகள் சேர்ந்து ஒரு தனிச் சேர்வையை உருவாக்கும் தாக்கம் ஆகும்.
(ஆ) உ+ம் $2Hg + O_2 \rightarrow HgO$
மூலகம் மூலகம் சேர்வை
$Co_2 + H_2O \longrightarrow H_2Co_3$
சேர்வை சேர்வை சேர்வை
(இ) பொதுச் சமன்பாடு
$A+B \rightarrow AB$

(2) இரசாயன பிரிகைத் தாக்கம்
(அ) ஒரு சேர்வை மூலகங்களாக அல்லது வேறு சேர் வை கள் ஆக பிரிகை அடைதல் இரசாயன பிரிகைத் தாக்கம் ஆகும்.
(ஆ) உ+ம் (1) $2HgO \longrightarrow 2Hg + O_2$
சேர்வை மூலகம் மூலகம்
(2) $CaCO_3 \longrightarrow CaO + CO_2$
(இ) பொதுச் சமன்ப டு
$AB \longrightarrow A + B$

(3) ஒற்றை இடப்பெயர்ச்சி (ஒற்றை மாற்றீடு)
(அ) ஒரு சேர்வையில் இருந்து மட்டும் மூலகம் அல்லது மூலிகம் இடம்பெயர்தல் ஒற்றை இடப்பெயர்ச்சி ஆகும்.
(ஆ) $CuSo_4 + Zn \longrightarrow ZnSo_4 + Cu$
இங்கு $CuSo_4$ இல் இருந்து மட்டும் $So_4$ இடம்பெயர்ந்துள்ளது
$Mg + 2HCl \longrightarrow MgCl_2 + H_2$
(இ) பொதுச் சமன்பாடு
$AB + C \longrightarrow CB + A$

குறிப்பு:- AB என்ற சேர்வையில் A மூலகம் B மூலிகம் என்க. மூலிகம் சேர்வையின் பின்னால் அமைய வேண்டும்.

(4) இரட்டை இடப்பெயர்ச்சி (இரட்டை மாற்றீடு)
(அ) இரண்டு சேர்வைகளில் இருந்தும் மூலகம் அல்லது மூலிகம் இடம்பெயர்தல் இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கம் ஆகும்-
(ஆ) உ+ம் $BaCl_2 + Na_2So_4 \longrightarrow BaSo_4 + 2NaCl$

இங்கு $BaCl_2$ இல் உள்ள Cl (குளோரைட்டு) மூலிகம் Na இடமும்

$Na_2So_4$இல் உள்ள $So_4^2$ (சல்பேற்று) மூலிகம் Ba இடமும் இடம் பெயர்ந்துள்ளதை காண்க.
(இ) பொதுச் சமன்பாடு
$AB + CD \longrightarrow AD + CB$

## பகுதி B

சுவாசம்

1. எல்லா உயிரினங்களிலும் நடைபெறும் ஒரு உடற் தொழிற்பாடாகும்.
2. எல்லா நேரங்களிலும் (பகலிலும் இரவிலும்) நடைபெறும்.
3. உணவு ஒட்சிசனால் ஒட்சியேற்றப்பட்டு சக்தியைத் தோற்றுவிக்கு'ம் செயற்பாடே சுவாசம் ஆகும்.
4. சுவாசம் கலங்களில் உள்ள இழைமணியில் நடைபெறும்.
5. சுவாச செயன் முறைக்கு தேவையான உணவு சமிபாட்டுத்தொகுதியில் இருந்தும் ஒட்சிசன் சுவாசத்தொகுதியில் இருந்தும் குருதியினல் கொண்டு சென்று கலங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.
6 மனிதனின் சுவாசத்தொகுதி.

அ. வெளிமூக்குத்துவாரம், மூக்குக்குழி, உள்மூக்குத்துவாரம், வாதனாளி, சுவாசப்பைகுழாய், சுவாசப்பை ஆகிய உறுப்புக்களால் ஆக்கப்பட்டது.

ஆ. சுவாசப்பை சுவாசப்பை சிறுகுழாய்களாலும் சிற்றறை மென்சவ்வாலும் குருதிமயிர்த்துளைக் குழாய்களாலும் ஆக்கப்பட்ட தசைச் செறிவுகுறைந்த அங்கமாகும்.

இ. சுவாசத்தொகுதி நெஞ்சறையினுள் காணப்படும் நெஞ்சறைமூடிய அமைப்பாகும்.

ஈ. நெஞ்சறை மேற்பக்கமாக தொண்டைத் தசைகளாலும் கீழ்ப்பக்கம் பிரிமென் தகட்டாலும் கற்றிவர நெஞ்சறைச் சுவராலும் மூடப்பட்டுள்ளது.

உ. நெஞ்சறையில் ஏற்படும் கனவளவு அமுக்கமாற்றத்தால் வளி உள்ளெடுத்து வெளிவிடப்படுகிறது.
(அ) நெஞ்சறை சுவர் முன் நோக்கியும் மேல்நோக்கியும் அசைய பிரிமென்தகடு கீழ் நோக்கி செல்ல செஞ்சறையின் கனவளவு கூட அமுக்கம் குறைய வளி உட்செல்கிறது.
(ஆ) மேற்கூறிய மாற்றங்களுக்கு எதிரான மாற்றங்களால் நெஞ்சறையின் கன ளவு குறைய அமுக்கம் கூட வளி வெளியனுப்பப்படும்.

குறிப்பு -
1. ★வளியை உள் எடுத்தல் உட் சுவாசம் எனவும் வெளிவிடுதல் வெளிச் சுவாசம் எனவும் அழைக்கப்படும்.
2. விலா எலும்புகளின் அசைவிலும் பிரிமென் தகட்டின் அசைவிலும் முறையே பழுவிடைத்தசைகளும் வயிற்றுத்தசைகளும் பங்கு கொள்ளும் எனவே மேற்குறித்த தசைகள் உட்சுவாச வெளிச்

## மாணவர் அரங்கு

சுவாச பொறிமுறையில் இத்தசைகள் பங்கு கொள்கின்றன.

ஊ. சுவாசத் தொகுதியில் வாயுப்பரிமாற்றமே நடைபெறுகிறது. வாயுப் பரிமாற்றம் நடைபெறும் இடம் சுவாச மேற்பரப்பு என அழைக்கப்படும்.

7. சுவாச மேற்பரப்பு ஒன்றிற்கு இருக்க வேண்டிய இசைபாக்கங்கள்
(1) ஊடகத்துடன் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும்.
(2) ஈரலிப்பாக காணப்பட வேண்டும்.
(3) மெல்லிய சுவர்களை கொண்டிருக்க வேண்டும்.
(4) பரப்புக் கூட்டப்பட்டிருக்க வேண்டும்.
(5) அதிக அள குருதி மயிர்த்துளைக் குழாய்களை கொண்டிருக்க வேண்டும்.

8. விலங்கிற்கு விலங்கு சுவாச மேற்பரப்பு வேறுபடும்.

| விலங்கு | | சுவாசமேற்பரப்பு |
|---|---|---|
| மண்புழு | — | தோல் |
| கரப்பான்) எறும்பு | — | புன்வாதனாளி |
| சிலந்தி) தேள் ) | — | ஏட்டுநுரையீரல் |
| மீன் | — | பூக்கள் |
| தவளை | — | சுவாசப்பை, வாய்க்குழி, தோல் |
| முலையூட்டிகள் | — | சுவாசப்பைகள் |

அவதானம்

1 சேற்று நிலங்களில் புதைந்த வாகன சிற்கள் நின்ற இடத்தில் சுழலும் வாகனம் அசையாது இதற்கு உராய்வு காணாமல் இருப்பதே காரணமாகும்
2. எண்ணெய் ஊற்றிய தரை பாசி உள்ள இடங்களில் உராய்வு போதாமையினாலேயே நாம் வழுக்கி விழுகின்றோம்
எனவே பொருள் இயங்க நாம் சமநிலையில் நடமாட உராய்வு அவசியமாகும்
3. உராய்வு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பின்வரும் நடவடிக்கைகளால் உராய்வு கூட்டப்படும்.
1. தளத்தை அழுத்தமற்றதாக்கல்
(அ) வாகன சிற்களில் தவாளிப்புக்கள் ஏற்படுத்தல்
(ஆ) பாதணிகளின் கீழ்ப்பகுதியில் பூவேலைப்பாடு காணப்படல்.
4. உராய்வு கூடுதலாக இருக்குமாயின் வேலை செய்தல் கடினமாகும் எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்வரும் நடவடிக்கைகளால் உராய்வு குறைக்கப்படும்.
1. தளத்தை அழுத்தமாக்கல்
2, எண்ணெய், கிறீஸ் பூசுதல்
3. குண்டுப் போதிகை உருளைப் போதிகை பயன்படுத்தல்
5. உராய்வு விசை பொருளின் தொடுபரப்பின் அளவில் தங்கியிராது அதன் தன்மையிலேயே தங்கியிருக்கும்
6. உராய்வு விசை
(1) பொருள் இயங்கும் திசைக்கு எதிர்த்திசையில் தொழிற்படும்.
(2) பொருளில் தாக்கும் விசையின் பருமனை கூட்ட உராய்வு விசையும் தன்னை அதிகரிக்கும் ஆனால் ஓரளவிற்கு மேல் அதிகரிக்காது
(3) பொருள் மட்டு மட்டாக இயங்கும் போதே ஆகக் கூடிய உராய்வு விசை காணப்படும். அது அத்தளத்தின் எல்லை உராய்வு விசை எனப்படும்.
7. (அ) உராய்வு விசையை உருள் உராய்வு, வழுக்குராய்வு என இரு வகைகளிலும் காணலாம்
(ஆ) உருளும் பொழுது தொழிற்படும் உராய்வு உருளுராய்வு எனப்படும்.
(இ) வழுக்கும் பொழுது தொழிற்படும் உராய்வு வழுக்குராய்வு ஆகும்.
(ஈ) உருள் உராய்விலும் வழுக்குராய்வு கூடிய பெறுமானம் உடையது.

அவதானம்: ஒரு மரக்குற்றியை இழுத்துச் செல்வதிலும் உருட்டி செல்வது இலகுவானதாகும்.

விளக்கம் இழுக்கும்பொழுது வழுக்குராய்வும், உருட்டும் பொழுது உருள் உராய்வும் தொழிற்படும். வழுக்குராய்வு உருள்உராய்விலும் கூட என்பதனால் இழுக்கும்பொழுது கடினமாகவும் உருட்டும்பொழுது இலகுவாகவும் உள்ளது.

- சு. அருள்நேசன்

# பொருளியல் A/L

## இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவுகள் - 1993
(G. C. E. A/L மாணவர்களின் பரீட்சைக்குரிய தரவுகள் மட்டும்)

தேசிய வருமானத் தரவுகள்

பொருளாதார வளர்ச்சி வீதம்

| ஆண்டு | மொ. உ. உ. வீதம் | தே. உ. வீதம் |
|---|---|---|
| 1983 | 5 0 | 4·0 |
| 1984 | 5 1 | 5 1 |

(இ) பொதுச் சமன்பாடு

$$AB + CD \rightarrow AD + CB$$

மாணவர்களின் கவனத்திற்கு

1. இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கத்தில் திண்ம சேர்வைகள் கரைசல் நிலையிலேயே தாக்கம் அடையும் எனவே கரையக் கூடிய பதார்த்தங்களே தாக்கம் நடைபெறும்.
   உ+ம் I $CuSo_4$ பளிங்குடன் NaCl ஐ சேர்த்தால் தாக்கம் நடைபெறாது. இரண்டையும் கரைசலாக்கி சேர்க்கவேண்டும்.
   II $CaCo_3$ யும் NaCl ஐயும் சேர்த்தால் தாக்கம் நடைபெறாது $CaCo_3$ கரையாதது ஆகையால்
2. இரட்டை இடப்பெயர்ச்சியில் இரு சேர்வைகள் தோன்றும். இதில் நீரில் கரையாத சேர்வையே வீழ்படிவாகும்.
3- வீழ்படி தோன்றினாலே இரட்டை இடப்பெயர்ச்சி நடைபெற்றுள்ளதை உறுதிப்படுத்தலாம்.

பயிற்சி

1. ஒரு மேசை மீதுள்ள 40N நிறை உடைய மரக்குற்றியை 25N விசையால் மட்டுமட்டாக இழுத்தால் தளத்தின் உராய்வுக் குணகம் யாது?

   W = 40  P=25  u = ?
   W=R  P=F  எனவே
   R=40  F=25

   $$\text{உராய்வுக் குணகம் } (u) = \frac{F}{R}$$

   $$= \frac{25}{40} = \frac{5}{8} = 0.625$$

2; 0.3 உராய்வுக்குணகமுடைய தளத்தில் உள்ள 75N நிறை உடைய குற்றியை மட்டுமட்டாக இழுக்க தேவையான விசையைக் காண்க?

   u=0.3  W=75  F=?
   W=R  ∴ R = 75

   $$u = \frac{F}{R}$$

   $$0.3 = \frac{F}{75}$$

   $$F = 0.3 \times 75$$

   $$F = 22.5N$$

3. 0.2 உராய்வுக் குணகமுடைய தளத்தில் உள்ள பொருளை 20N விசையால் மட்டுமட்டாக இழுத்தால் அதன் நிறை யாது?

   u=0.2  P=20N  W=?
   P=F  ∴ F=20  W=R

   $$u = \frac{F}{R} \qquad R = \frac{20}{0.2}$$

   $$0.2 = \frac{20}{R} \qquad R = \frac{200}{2}$$

   $$0.2R = 20 \qquad R = 100N$$ நிறை = 100N

(4) வீழ்படிவு தோன்றாவிடில் தாக்கம் நடைபெற்றாலும் எம்மால் அறியமுடியாது.

(5) $Pb(No_3)_2$ + Nacl கரைசல்களையும் சேர்த்தால்

$$Pb(No_3)_2 + Nacl \rightarrow PbCl_2 \downarrow + NaNo_3$$ என தாக்கம் அமையும்.

இங்கு சோடியத்தின் எல்லாஉப்பும் நீரில்கரையும்எனவே $NaNo_3$ வீழ்படிவாகாது எனமுடிவு செய்க. Pb, Hg, Srகுளோரைட்டேநீரில் கரையாது எனவே $PbCl_2$ வீழ்படிவாகும் என காண்க.

(பயிற்சி1, 2, 3 இல் மியூவிற்கு பதில் u பயன்படுத்தப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| | | தோல் |
| முலையூட்டிகள் | — | சுவாசப்பைகள் |
| அமீபா | — | கலமென்சவ்வு |

கலச்சுவாசம்

01. கலச்சுவாசம் கிளைக்கோப்பகுப்பு எனும் செயல்முறையை தொடர்ந்து நடைபெறும்.
02. குளுக்கோசு (சுவாச உடைபொருள்) பைரூபிக் அமிலமாக அல்லது இலத்திக் அமிலமாக மாற்றப்படும் செயல்முறையே கிளைக்கோப்பகுப்பு ஆகும்.
03. கிளைக்கோப்பகுப்பிற்கு ஒட்சிசனின் ஈடுபாடு தேவையில்லை.
04. கிளைக்கோப் பகுப்பின் பின்போதிய அளவு ஒட்சிசன் கிடைத்தால் காற்றிற் சுவாசமும் ஒட்சிசன் குறைவாக கிடைத்தால் அல்லது கிடைக்காவிட்டால் காற்றின்றிய சுவாசமும் நடைபெறும்
05. காற்றிற் சுவாசத்தின் பொழுது குளுக்கோசு ஒட்சிசனினால் ஒட்சியேற்றப்பட்டு $Co_2$, $H_2o$ சக்தி என்பவற்றை விரைவாக கொடுக்கும்.

$$C_6H_{12}O_6 + 6o_2 \longrightarrow 6Co_2 + 6H_2o + \text{சக்தி}$$

06. காற்றிற் சுவாசத்தின் போது குளுக்கோசு காபனீர் ஒக்சைட் எதையில் அற்ககோல், சொற்ப சக்தி என்பவற்றைக் கொடுக்கும்
07. காற்றின்றிய சுவாசம் சில நுண்ணங்கிகளால் மேற்கொள்ளப்படும். சிறப்பாக காற்றின்றிய சுவாசத்தை நடத்தும் அங்கி மதுவம் (Yeast) ஆகும்
08. வெல்ல ஊடகங்களிலேயே மதுவம் காற்றின்றிய சுவாசத்தை திறம்பட நடத்தும்
09. காற்றின்றிய சுவாசம் பயன்படும் சந்தர்ப்பங்கள்
    I வெல்லக் கரைசலில் இருந்து மதுசாரம் தயாரித்தல்
    II அப்பம், தோசை, பாண் தயாரிப்பில் அவற்றை பொங்கச் செய்ய

மாணவர்களின் சிந்தனைக்கு

1. புதிய கள்ளு ஏன் இனிக்கின்றது ?
2. கள்ளு வெறிப்பதற்கு அதில் உள்ள எப்பதார்த்தம் காரணம்?
3. கள்ளின் புளிப்புச் சுவைக்கு எப்பதார்த்தம் காரணம்?
4. சீனிதட்டுப்பாடான காலங்களில் பாண் நன்றாக பொங்குவதில்லை?
5. அடிக்கடி பலமாக சிரித்தால் வயிற்றில் நோ ஏற்படுதலுக்கான காரணம் யாது?
6. சாப்பிடும் பொழுது சிரிக்காதீர்கள் என எச்சரித்தலுக்கான காரணம் யாது?
7. திடீரென அதிகளவு உடற்பயிற்சி செய்யும் பொழுது தசைப் பிடிப்பு ஏற்படுதல்
8. தசைப்பிடிப்பு ஏற்பட்ட இடத்தை தேய்க்கும் பொழுது தசைப் பிடிப்பு குணமடைதலுக்கான காரணம் யாது?
9. வெயிலில் இடப்படும் மண்புழு இறந்து விடுவதற்கானகாரணம் யாது?
10. கரப்பானின் தலையை நீரினுள் அமிழ்த்தினால் இறக்காது உடலை நீரினுள் அமிழ்த்தினால் இறந்துவிடும் என்பதற்கான காரணம் யாது? (விடைகள் அடுத்த மாணவர் அரங்கில் வெளிவரும்)

## பகுதி C

உராய்வு விசை

(1) பொருள் இயங்கும் திசைக்கு எதிராக தொழிற்படும் விசை உராய்வு விசையாகும்
(2) உராய்வு விசை பொருள்கள் இயங்குவதற்கும் நாம் சமநிலையில் நடமாடுவதற்கும் அவசியமாகும்

| | | | |
|---|---|---|---|
| | 1983 | 5 0 | 4·0 |
| | 1984 | 5 1 | 5.1 |
| | 1985 | 5.0 | 5 3 |
| | 1986 | 4·3 | 4·5 |
| ★ | 1987 | 1·5 | 1·6 |
| | 1988 | 2·7 | 2·6 |
| | 1989 | 2·3 | 2·3 |
| ★ | 1990 | 6·2 | 6·4 |
| | 1991 | 4·6 | 4·6 |
| | 1992 | 4 3 | 4·4 |
| ★ | 1993 | 6 9 | 7·6 |

1992 வினா:

கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதங்களைப் பரிசீலனை செய்க.

தலா உற்பத்தி

| | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| ரூபாவில் (நடைமுறை விலை) | 16702 | 19235 | 21786 | 25389 |
| ஐ அ. டொலரில் | 417 | 465 | 497 | 526 |

மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளடக்கம்

மொ. தே. உற்பத்தியில் (நிலையான விலைகளில்) துறைவாரியான பங்கு (சதவீதம்)

| | | 1993 |
|---|---|---|
| 1 | விவசாயம் | 21.2 |
| 2 | சுரங்கத் தொழில், கல் அகழ்வுத் தொழில் | 2.5 |
| 3 | தயாரிப்புத் தொழில் | 19.4 |
| 4 | கட்டிட ஆக்கம் | 7.0 |
| 5 | சேவைகள் | [illegible] |
| 6 | வெ. நா. கி தே காரணி வருமானம் | -1 5 |
| 7 | மொ தே. உற்பத்தி | 100.0 |

பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம்

| | 1977 | 1983 | 1993 |
|---|---|---|---|
| விவசாயத்துறை | 35 | 28 | 21 |
| கைத்தொழில் துறை | 17 | 25 | 28 |
| சேவைகள் துறை | 48 | 47 | 51 |

1992 வினா:

கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாகத் தெளிவு படுத்துக. (1974, 1976 இலும் இதே போன்ற வினா)

(4ஆம் பக்கம் பார்க்க)

# கணக்கியல்

# A/L

## அலகு 2
## கணக்கீட்டுக்கான அறிமுகம்
## Introduction to Accounting

### 2.1 கணக்கியலின் தோற்றப்பாடு

நாகரிக; விஞ்ஞான; தொழில் நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக மனிதனது தேவைகள் வரையறுக்கப்படாதவையாகவும்; பல தரப்பட்டவையாகவும்; அதிகரித்துச் செல்பவையாகவும் காணப்படுகின்றன. ஆனால்; பொருளாதாரங்களிலோ மனித தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வளங்கள் அருமையானவையாகவே உள்ளன. எனவே; மனிதன் தனது வரையறையற்ற தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அவ்வரையறுக்கப்பட்ட வளங்களைத் திட்டமிட்ட முறையில் சிக்கனமாகக் கையாள்வதற்கும்; அதிகரித்து வரும் உற்பத்தி வர்த்தகச் செயற்பாடுகளை இலகுவில் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும்; தேவையான போது தேவைப்படும் முடிவுகளைத் தீர்மானித்துக் கொள்வதற்குமாகக் கணக்கு வைக்கும் முறையினைக் கைக்கொள்ளத் தொடங்கினான். அவை பின்னர் கணக்கியல் எனும் துறையாக விருத்தியடையத் தொடங்கின. இக்கணக்கீட்டுத் துறையானது 1494இல் இத்தாலியைச் சேர்ந்த ''லூகாபெசியோலி'' (Luca - Pacili) என்பவரால் 'இரட்டைப் பதிவு முறை' (Double Entry System) அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மேலும் வளர்ச்சி எய்தியது.

### 2.2 கணக்கியல் தொழிற்பாடுகள்- Accounting Operations

வணிக நிறுவனமொன்றில் நிதிசார்ந்த தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்; நிலைமாற்றங்கள் நிகழ்வுகள் என்பவற்றைப் பதிவு செய்தல்; வகைப்படுத்தல்; சுருக்கிக் கூறல்; பகுத்தாய்தல்; விமர்சனம் செய்தல் ஆகிய தொழிற்பாடுகளே கணக்கியல் தொழிற்பாடுகளாகும்.

(அ) பொருளாதார நடவடிக்கைகளை இனங்காணல்:- **Find the Economical Transactions**

நிறுவனத்தில் நிகழும் நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்கள்; நிலைமாற்றங்கள்; நிகழ்வுகள் என்பவற்றை இணங்கண்டு அவற்றை ஏடுகளில் பதிவு செய்வதற்குப் பொருத்தமான முறைகளை தெரிவு செய்வதாகும்.

(ஆ) பதிவு செய்தல்:- **Recording**

இனங்காணப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை உரியவாறு உரிய ஏடுகளில் பதிவு செய்தலாகும்.

(இ) வகைப்படுத்தல் **Classifying**

ஏடுகளில் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளை உரிய தலையங்கங்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுவதாகும். உதாரணமாக; நிறுவனமொன்றின் மூலதனச் செலவுகளையும்; வருமானச் செலவுகளையும் வேறுபடுத்திக் காட்டுவதாகும்.

(ஈ) சுருக்கிக் கூறல் பொழிப்புரை **Summarising**

ஏடுகளில் விபரமாகப் பதியப்பட்டு வகையிடப்பட்ட வேறுபட்ட நடவடிக்கைகளை வியாபார நிலைமைகளையும்; ஏனைய பெறுபேறுகளையும் அறிதற் பொருட்டு சுருக்கிக் கூறலாகும். உதாரணமாக; பரீட்சை மீதி; கட்டுப்படுத்தும் கணக்குகள்; உற்பத்தி வியாபார இலாபநட்டக்க/கு ஐந்தொகைகள் யாவும் பொழிப்புகளே ஆகும்.

(உ) பகுத்தாய்தல் **Analysing**

தேவைகளுக்கேற்ப நடவடிக்கைகளை விரிவுபசாரங்கள் என்பன கையாளப்படும்

(ஊ) விமர்சனம் செய்தல் **Interpreting**

கணக்குகளில் பதியப்பட்டிருக்கும் நிகழ்காலத் தகவல்களின் அடிப்படைகளில் எதிர்காலம் பற்றிய திட்டமிடல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக வேறுபட்ட முடிவுகளைப் பெறுதல் விமர்சனம் செய்தலாகும். உதாரணமாக; நிறுவனங்களின் இலாபத்தன்மை; அதன் புரள்வு விகிதம் என்ன; தொழிற்பாடு மூலதன நிலைமை என்ன என்பது போன்ற வேறுபட்ட முடிவுகளைப் பெற்று எதிர்காலம் பற்றிய திட்டமிடல் செய்தல்; மதிப்பீடு செய்தல்; அவற்றை உண்மைத் தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் என்பனவாகும்.

### 2.3 கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்துவோர் Users of Accounting Informations

கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்துவோராகப் பின்வரும் சாரார்கள் காணப்படுகின்றனர்

(அ) வியாபாரத்தின் உரிமையாளர்கள் Owners of the Business

இவர்கள் வியாபாரத்தின் இலாப நிலைகளையும், நிதிவளங்களையும் அறிந்து கொள்வதற்குக் கணக்கியல் தகவல்களை கையாள்வர்.

(ஆ) எதிர்பார்த்திருக்கும் கொள்வனவாளர் A Prospective Buyer:

வியாபாரத் தாபனங்களின் உரிமையாளர்கள் அவர்களது முயற்சிகளை விற்பனை செய்ய விரும்பும்போது அவற்றைக் கொள்வனவு செய்ய எதிர்பார்த்திருப்போரும் அந்நிறுவனம் பற்றிய தகவல்களில் அக்கறை கொண்டிருப்பர்.

(இ) வங்கி The Bank

வியாபாரத் தேவைகளுக்காக அவற்றின் உரிமையாளர்கள் வங்கியிலிருந்து கடன் பெற விரும்பும் போது நிறுவனங்களின் நிதி நிலைமைகளை அறிந்து கொள்வதில் வங்கிகள் ஆர்வம் காட்டுகின்றன.

(ஈ) வரி அதிகாரிகள் Tax Inspectors

நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய வரித்தொகைகளைக் கணிப்பீடு செய்ய இவர்கள் தகவல்களை உபயோகிப்பர்.

(உ) முதலீட்டாளர்கள் Investors

குறித்த நிறுவனங்களில் முதலீடு செய்தல் அனுகூலமானதா என்பதைத் தீர்மானிப்பதற்கு

(ஊ) எதிர்பார்த்திருக்கும் பங்காளர் A Prospective Partner

தாபன உரிமையாளர் ஒருவர் தனது உரிமையினை இன்னுமொருவருடன் பகிர்ந்து கொள்ள விரும்பினால் அவ்வாறு பங்காளியாகச் சேர விருப்புடையவர் அந்நிறுவனத்தின் தகவல்களில் அக்கறை கொள்வார்.

(எ) தொழிற் சங்கங்கள் Labour Unions

தொழிலாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக.

### 2. 4 பேரேடுகளும் பேரேடுகளின் வகைகளும் Ledgers and Types of Ledgers

ஒத்த பல பேரேட்டுக் கணக்குகளின்தொகுப்பே பேரேடு ஆகும். இப்பேரேடுகள் பொதுவாக வருமாறு மூவகைப்படும்

(அ) விற்பனை பேரேடு Sales Ledger

வருமதியாளர்களின் கணக்குகளை உள்ளடக்கிய பேரேடாகும்

(ஆ) கொள்வனவுப் பேரேடு Purchases Ledgers

சென்மதியாளரது கணக்குகளை உள்ளடக்கிய பேரேடாகும்

(இ) பொதுப்பேரேடு General Ledger

வருமதியாளர் சென்மதியாளர் தவிர்ந்த ஏனைய கணக்குகளை உள்ளடக்கிய பேரே

★ பிரத்தியேகப் பேரேடு Private Ledger

மூலதனக் கணக்குகள், எடுப்பனவுக் கணக்கு போன்றதான கணக்குகளைக் கொண்டிருக்கும்பேரேடு பிரத்தியேகப் பேரேடாகும் நிறுவனத்தில் கடமை புரியும் ஊழியர்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு இரகசியமாக தமக்கும் நிறுவனத்திற்குமிடையிலான தொடர்புகளைப் பேணுவதற்காக உரிமையாளர்கள் இப்பிரத்தியேகப் பேரேட்டைப் பேணலாம்

### 2.5 பேரேட்டுக் கணக்குகளின் வகைகள் Types of Accounts

கணக்குகள்
Accounts

- நபர்கணக்குகள் Personal Accounts
  - கடன் பட்டோர்கணக்கு Debtors' A/C
  - கடன் கொடுநர்க/கு Creditors' A/C
- நபரில் கணக்குகள் Impersonal A/C
  - மெய்க் கணக்கு Real A/C
  - பெயரளவுக் கணக்கு Nominal A/C

(அ) நபர் கணக்கு Personal A/C

கடன்பட்டோர்; கடன்கொடுத்தோரது கணக்குகள் நபர் கணக்குகளாகும்.

(ஆ) மெய்க்கணக்கு Real A/C

சொத்துக்கள் அனைத்தையும் குறிக்கும் கணக்குகள் மெய்க் கணக்குகளாகும்.

உதாரணம்:- காணிகட்டடக் க/கு; நன்மதிப்புக் க/கு; முதலீட்டுக்க/கு.

(இ) பெயரளவில் கணக்கு Nominal A/C

செலவினங்கள்; வருமானங்கள்; மூலதனம் என்பவற்றின் மீதான கணக்குகள் பெயரளவில் கணக்குகளாகும்.

உதாணம்:- கொள்வனவுக் க/கு; விற்பனைக்க/கு; சம்பளக்க/கு,

### 2.6 அடிப்படைக் கணக்கீட்டின் ஒழுங்கமைப்பு The Basic Structure

1) தகவல்களின் மூல ஆவணங்களை இனங் காணுதல்

★ கொள்வனவு / விற்பனைப் பட்டியல்கள்
★ திரும்பல்களின் வரவுத்தாள் / செலவுத்தாள்
★ காசோலை அடியிதழ்கள் / வங்கியில் வைப்பிலிடும் பத்திரத்தின் அடித்துண்டு
★ பெறுவனவுகளின் பற்றுச்சீட்டுகள் / கொடுப்பனவுகளின் கச்சாத்துகள்
★ ஏனைய தகவல்களின் அங்கீகரிக்கக்கூடிய ஆவணங்கள்

↓

2) தகவல்களை வகைப்படுத்தி மூலப்பதிவுகளை இடுதல்

★ கொள்வனவு / விற்பனை நாளேடுகள்
★ உட்திரும்பல் / வெளித்திரும்பல் ஏடுகள்.
★ காசேடு
★ நாட்குறிப்புகள்

↓

3) இரட்டைப் பதிவுகளை நிறைவேற்றுதல்

| பொதுப் பேரேடு | விற்பனைப் பேரேடு | கொள்வனவுப் பேரேடு | காசேடு |
|---|---|---|---|
| மெய்க்கணக்குகள் பெயரளவுக் கணக்குகள் | வருமதியாளர் கணக்குகள் | கடன்கொடுநர் கணக்குகள் | காசுப்புத்தகமும் சில்லறைக் காசேடு |

↓

4) இரட்டைப் பதிவுகளின் எண்கணித செம்மையைச் சரிபார்த்தல் — பரீட்சைமீதி

↓

5) கணக்கீட்டுக்கால இலாபநட்டங்களை அறிதல் — வியாபார இலாபநட்டக் கணக்கு

↓

6) கணக்கீட்டுக்காலமுடிவின்நிதிநிலைமைகளை **அறிதல்** — ஐந்தொகை

### 2.7 கணக்கீட்டுச் சக்கரம் Accounting Cycle

நிதியறிக்கைகளைத் தயாரிப்பதற்காக நடவடிக்கைகளைப் பகுத்தறிவது முதல் கணக்குகளை மூடும் வரையான கணக்கீட்டுச் செய்முறைகள் ஒரே வரிசைப்படிமுறைகளில் ஒவ்வோர் கணக்கீடுக் காலப் பிரிவிலும் ஒழுங்காக மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு முறைமை கணக்கீட்டு சக்கரம் அல்லது கணக்கீட்டுச் சுற்றோட்டம் எனப்படும்.

உள்ளீடு — செய்முறை — வெளியீடு

ஆவணங்களுடன் அல்லதுபதிவுகளுடன் தொடர் [illegible] → மூலஆவணம் → நாட்குறிப்பு → பேரேடுகள் → வேலைத்தாள் → நிதியறிக்கைகள்

ஐந்தொகைகள் யாவும் பொழிப்புகளே ஆகும்.

(உ) பகுத்தாய்தல் **Analysing**

தேவைகளுக்கேற்ப நடவடிக்கைகளை விரிவுபடுத்திக் கூறுதலே பகுத்தாய்தலாகும். இதற்காக நிதியோட்டக் கூற்றுகள்; கணக்கியல் விகிதா

(இ) பொதுப்பேரேடு **General Ledger**

வருமதியாளர் சென்மதியாளர் தவிர்ந்த ஏனைய கணக்குகளை உள்ளடக்கிய பேரேடாகும். (உ+ம் செலவுகள், நிலையான சொத்துக்கள், மூலதனம்)

அல்லது பதிவுகளுடன் தொடர்பானவை: மூலஆவணம் —> நாட் குறிப்பு —> பேரேடுகள் —> வேலைத் தாள் —> நிதியறிக் கைகள்

செயற்பாட்டுடன் தொடர்பானவை: பகுத்தறிதல் —> பதிவு செய்தல் —> தாக்கல் செய்தல் —> சீராக்குதல் —> தயாரித்தல்

கணக்கீட்டுச் சக்கரத்தின் படிமுறைகளாவன:-

(அ) மூல ஆவணங்களிலிருந்து நடவடிக்கைகளைப் பகுத்தறிதல்.

(ஆ) நடவடிக்கைகளை நாட்குறிப்புகளில் பதிவு செய்தல்.

(இ) பதிவுகளைப் பேரேடுகளுக்குத் தாக்கல் செய்தல்.

(ஈ) வேலைத்தாளின் நோக்கங்களுக்காக கணக்கீட்டுக் கால முடிவில் நடவடிக்கைகளைச் சீராக்கல்.

(உ) வேலைத் தாளிலிருந்து நிதியறிக்கைகளைத் தயாரித்தல்

(ஊ) நடப்புக் கணக்கீட்டுக் காலத்தின் தீர்மானங்களைச் செய்வதற்குக் கணக்குகளை மூடி புதிய கணக்கீட்டுக் காலத்துச்கான கணக்கீட்டுச் செயற்பாடுகளை ஆரம்பித்தல்

# பொருளியல்

ஆக்கம்:

**S. K. பிரபாகரன்**

B. B A (Spl)

ஆசிரியர்

உடுவில் மகளிர் கல்லூரி

## இலங்கையின் மொத்தத் தேசிய செலவின் உள்ளடக்கம்

மொத்தத் தேசிய செலவின் சதவீதம்

| | | 1993 |
|---|---|---|
| 1 | தனியார் நுகர்வு | 75.3 |
| 2 | அரச (பொது) நுகர்வு | 9 5 |
| 3 | மொ. உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | 25.6 |
| 4 | இருப்புக்களின் மாற்றங்கள் | 0.4 |
| 5 | மொத்த உள்நாட்டுச் செலவு (1+2+3+4) | 110.8 |
| 6 | தேறிய வெளிநாட்டு முதலீடு | —3.8 |
| 7 | வெளிநாட்டுக் கொடைகளினதும் மாற்றல்களினதும் தேறிய பெறுகைகள் | 7.0 |
| 8 | மொத்தத் தேசிய செலவு (5+6+7) | 100.0 |

1983 வினா'

இலங்கையின் மொத்தத் தேசிய செலவில் தனியார் நுகர்வு' பொது நுகர்வு என்பவற்றின் அண்ணளவான சதவீதப் பங்கு என்ன?

## முதலீட்டு வீதம், சேமிப்பு வீதம்

(சந்தை விலையில் மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக முதலீடு, சேமிப்பு)

| | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| முதலீட்டு வீதம் | 22 | 23 | 24 | 26 |
| உள்நாட்டு சேமிப்பு வீதம் | 14 | 13 | 15 | 16 |
| தே[illegible] சேமிப்பு வீதம் | 17 | 15 | 18 | 20 |

வினா; 1990 (விசேட 1991)

1. அண்மைக்கால ஆண்டுகளில் இலங்கையிற் காணக்கூடியதாயிருந்த முதலீட்டு விகிதம் யாது?
2. அண்மை ஆண்டுகளில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் என்ன விகிதத்தில் அமைந்திருந்தன?

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் 1983 - 1993

குறிப்பு: இப்பகுதியில் மேற்குறிப்பிடப்பட்ட வினாக்கள் தற்போது பெரும்பாலும் பொருளியல் ii வினாத்தாளில் பகுதி ii இல் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி தொடர்பான வினாக்களின் ஒரு பகுதியாகவே இடம்பெறுகின்றன. மாணவர்கள் வினாத்தாள் ii இல் குறைந்த புள்ளிகளைப் பெறுவதற்கு இத்தகைய புள்ளி விபரத் தரவுகளுடன் விடையளிக்காமையே முக்கிய காரணமாக உள்ளது.

(தொடரும்)

மென்பான விற்பனையாளருக்கு



ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. மாருதி ஸ்ரோஸ், கே. கே. எஸ். றோட், வல்வெட்டித்துறை.
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை.
3. சாயி கிருஷ்ணா, வதிரிச்சந்தி, நெல்லியடி.
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி.
5. அறிவகம், சாவகச்சேரி.
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டிவீதி, பளை

(சி-9341)

சீட்டிழுப்பு முடிவுகள்

கெருடாவில் தொண்டமானாறு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ச. ச. நிலைய வளர்ச்சிக்காக 28-05-94 ம் திகதி குலுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு;

1-ம் பரிசுக்குரிய இலக்கம் — 325
2-ம் ,, ,, — 1964
3-ம் ,, ,, — 2114

ஆறுதல் பரிசில்கள் இலக்கம்:

(1) 306 (6) 38
(2) 1374 (7) 237
(3) 2071 (8) 96
(4) 2160 (9) 383
(5) 2363 (10) 303

மு. கு: 10-06-94 ஆம் திகதிக்கு முன்பு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகிகள்

(8413)

விற்பனைக்கு

கொழும்பு சிமெந்து, கற்பூரம், வாள்பிளேட், மோட்டார் சயிக்கிள் உதிரிப்பாகம்

யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

C. M. சுகந்தினி
309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(8384)

சிந்தனைக்கு

தவறுவது மனித இயல்பு; பழியை பிறர் மீது சுமத்துவது அரசியல்.

பில் வாஹ்ன்.

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# இசைமாற்றும் முயற்சி

அதிகாரப் போட்டியில் வெற்றி பெறுவதற்கும், ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பதற்கும் சிங்கள ஆட்சியாளர்கள் பௌத்தபீடங்களின் ஒத்துழைப்பையும், ஆசியையும் வழமையாக வேண்டி நிற்பதுண்டு. பௌத்தபீடங்களின் செல்வாக்கு அந்தளவிற்கு சிறிலங்கா அரசியலில் நிலையான தொன்றாகவே இருந்து வருகின்றது.

இந்தவகையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் பௌத்த பீடங்களிடம் புதிய கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்; இதன் மூலம் அவர் கோருவது என்னவெனில், "சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டி எழுப்பி, ஊழலும் வீண்விரயமும் ஒழிக்கப்பட்ட நிலையில் நாட்டை முழுமையாக அபிவிருத்தியில் கொண்டு செல்வதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்பதே ஆகும்.

டி.பி விஜேதுங்காவின் இக்கோரிக்கையின் அடிப்படை என்ன என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. இது வழமையாகக் காலத்திற்குக் காலம் விடும் சம்பிரதாய பூர்வமான கோரிக்கையாகவும் இருக்கலாம் அல்லது இவ்வாண்டு இறுதியில் வரப்போகும் தேர்தலை மனதிற் கொண்டு அரசியல் லாப நோக்கில் விடப்பட்டதாகவும் இருக்கலாம். இல்லாது போனால் இக் கோரிக்கையில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதானமின்மைக்கும், சிறிலங்காவில் மலிந்து போயுள்ள லஞ்சம், ஊழல் என்பனவற்றிற்கும் முழுப் பொறுப்பும் ஐ. தே. கட்சியின் கொள்கையும், அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளுமே ஆகும். இந்நிலையில் பௌத்த சங்கத்தினரிடம் சமாதானத்திற்கும் அதன் மூலம் அபிவிருத்திக்கும் உதவுங்கள் எனக் கோருவதில் அர்த்தம் என்ன இருக்கின்றது?

இலங்கையில் இனப்பிரச்சினை உருவாவதற்கும், அது இன்றைய மோசமான கட்டத்தை அடைவதற்கும்

# "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" விவகாரம் இந்தியாவைப் பகைக்கக் கூடாது

## மேல் மாகாண சபை தீர்மானம்

(கொழும்பு)

புத்தளம் இரணவிலவில் அமைக்கப்படும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலைய கட்டட வேலைகளை மத்திய அரசு நிறுத்தவேண்டும் என்ற பிரேரணை மேல் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஏ.டபிள்யூ வீலரட்ண வடக்கு - கிழக்கு யுத்தத்தில் எமக்கு உதவிசெய்ய எந்த ஒரு உலகநாடும் முன் வ வில்லை இந்தியா மட்டுமே 1987இல் எம்முடன் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டது. வொய்ஸ்ஒவ் அமெரிக்கா உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்யவேண்டுமென இச்சமாதான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் எதிர்பார்ப்பிற்கு எதிராக வொய்ஸ் ஒவ் அமெரிக்கா கட்டடத்தை அமைக்க அனுமதி வழங்குவதன் மூலம் நாம் இந்தியாவின் நல்லெண்ணத்தை இழக்கின்றோம். அத்துடன் இந்தியாவுடன்மோதல் ஏற்படுத்த முனைகிறோம் என்றார். இவ்விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றிய பேர்சி குணதிலகா, வடக்கு-கிழக்கில் யுத்தம் நடைபெறுகையில் நாம் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளமுடியாது. இந்தியாவைப் பகைத்துக் கொண்டு நாம் வடக்கு-கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாது. பொது ஜன ஐக்கிய முன்னணி மத்தியில் ஆட்சிக்கு வந்தால் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா கட்டட நிர்மாணத்தை நிறுத்தும் என்றார்.

# தேர்தலுக்காகப் படுகொலைகள் தெற்கில் நிலவும் அபாயம்

(கொழும்பு)

ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்காக தென்னிலங்கையில் பல மனிதப் படுகொலைகள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள், கட்சிவேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் என்று பலர் இத்தேர்தல் காலத்தின்போது படுகொலை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது

இவ்வாறான படுகொலைகளின் மத்தியில் அல்லதுஇப்படு கொலைகளைத் தொடர்ந்தே தேர்தல் நடைபெறும் என்று பல அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலங்களிலும் இத்தகைய படுகொலைகள் மூலம் ஆளும் கட்சி தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டமை குறித்தும் சுட்டிக் காட்டப்படுகிறது.

# உற்பத்தி எழுச்சி வாரம் போட்டி முடிவுகள்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகளில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இன்பருட்டி காண்டீபன் விளையாட்ரங்கில் நடைபெற்ற கடற்புலிகள் மாவட்டப்போட்டிகளில் மாவட்டரீதியாக வெற்றி பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நீச்சல் போட்டி:- | |
| முதலாம் இடம்:- | குட்டிராசா சூரியகாந்தன் (இன்பருட்டி) |
| இரண்டாம் இடம்:- | சி. நற்குணதாஸ் (கற்கோவளம்) |
| மூன்றாம் இடம்:- | நா. சசிகுமார் (தொண்டமானாறு) |
| பாய்மரம் ஓட்டுதல்:- | |
| முதலாம் இடம்:- | சி. சுகுணதாஸ் (இன்பருட்டி) |
| இரண்டாம் இடம்:- | ந. சிவனேஸ்வரன் (இன்பருட்டி) |
| துடுப்பு வலித்தல்:- | |
| முதலாம் இடம்:- | சி. சுகுணதாஸ் (இன்பருட்டி) |
| இரண்டாம் இடம்:- | க. தங்கேஸ்வரன் (இன்பருட்டி) |
| வலை பின்னல்:- | |
| முதலாம் இடம்:- | யா. பற்றிமாநாயகி (அல்வாய்மேற்கு) |
| இரண்டாம் இடம்:- | சு. ஆறுமுகசாமி (சுழிபுரம் மேற்கு) |
| மூன்றாம் இடம்:- | மா. சிவனேசன் (சுழிபுரம் மேற்கு) |
| கம்பாங்குத்துதல்:- | |
| முதலாம் இடம்:- | செ. பாலசிங்கம் (இன்பருட்டி) |
| இரண்டாம் இடம்:- | சு. சந்திரலிங்கம் (இன்பருட்டி) |
| மூன்றாம் இடம்:- | சு. ஆறுமுகசாமி (சுழிபுரம் மேற்கு) |
| கிடுகு பின்னுதல்: | |
| முதலாம் இடம்:- | ச. சுசீலாதேவி (குடத்தனை) |
| இரண்டாம் இடம்:- | நா. மஞ்சுளா (நெடுங்குளம் வீதி கொழும்புத்துறை) |
| மூன்றாம் இடம்:- | சி. யோகராணி (கொழும்புத்துறை) |

தும்புக்கடை தயாரித்தல்:-

**தேசிய கல்வி நிறுவகம் பயிற்சிபெற்ற**

# உயர்தர வள ஆலோசகர் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

மகரகம தேசிய கல்விநிறுவகத்தில் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து யாழ் வலயம் 1 இல் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க க.பொ.த உயர்தர வள ஆலோசகர் பதவிக்கு யாழ் வலயம் கல்விப்பணிப்பாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

பௌதிகம், கணக்கீடு, பொருளியல், வணிகக்கல்வி, வணிகப் புள்ளிவிபரவியல், இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய ஏழு பாடங்கள் தொடர்பிலும் பாடத்திற்கேற்ற பட்டம், பட்டப்பின் டிப்புளோமா, 3 வருடத்திற்கு குறையாத உயர்தர வகுப்பிற் பாடம் கற்பித்த அனுபவம் ஆகிய குறைந்த பட்சத் தகுதியுடையவர்கள் தமது பாடசாலை அதிபரினூடாக யூன் மாதம் 6ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (சி,ச)

# அரச ஊழியரின் குறைந்த சம்பளம் 3000 ரூபாவாக ஆக்கப்பட வேண்டும்

## தொழிற்சங்கங்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்க மற்றும் திணைக்கள ஊழியர்களின் ஆகக்குறைந்தளவு சம்பளம் ரூபா மூவாயிரமாக்கப்பட வேண்டும் என பல தொழிற்சங்கங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

பொருள்களின் விலை உயர்வினால் மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்க மற்றும் திணைக்கள ஊழியர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் இந்நிலையில் இச் சம்பள உயர்வு கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும் என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன,

**தமிழக**

காட்டத்தக்கது

சென்னை மைலாப்பூர் தொகுதியிலும் அ. இ. அ. தி. மு. க சுமார் நான்காயிரத்துக்கு குறைவான வாக்குகள்

**கரபந்தாட்ட**

**புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்**

1994.05.30 - திங்கள் இரவு

08.01 - கப்டன் வீரத்தேவன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
08 20 - செய்திச்சரம்
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம் - பிரபல தவில்வித்துவான் கைதடியூர் பழனி அவர்களுடனான செவ்வி

1994.05.31 - செவ்வாய் காலை
07.02 - மாவீரவணக்கம்
07.15 - இன்றைய தாரகை
07.30 - செய்திகள்
07 35 - பத்திரிகைச் செய்திகள்
07 40 - தாயகப்பாடல்கள்

# வருடாந்த கூட்டம்

கண் பார்வையற்றவர்கள் உலகிற்குப் பாரமானவர்கள் அல்ல. உரிய வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டால் உலகின் பயன் மிக்க பிரஜைகளாக அவர்களால் நிச்சயமாக வாழ முடியும்.

யாழ் விழிப்புலனற்றோர்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 24ம் திகதி அன்று கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற்றது இக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சங்கத்தின் துணைத் தலைவர் திரு பா. சந்திரசேகரம் அவர்கள் தமது உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் புதிய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இதன்படி, திரு. ஆ.ரவீந்திரன் தலைவராகவும், திரு. ஆ. பரமேஸ்வரன் செயலாளராகவும், செல்வி சி அருணஜோதி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவாவதற்கும், அது இன்றைய மோசமான கட்டத்தை அடைவதற்கும் பௌத்த பீடங்களும் கணிசமான பங்களிப்பு ஆற்றிய வைதான். ஆனால் அவர்கள் பிரச்சினை உருவாக்கத் திற்குக் காரணம். ஆயினும் விடயத்தைத் தமது அரசியல் லாபத்திற்காகப் பெரிதாக்கி தீர்க்க முடியாத சிக்க லாக்கியவர்கள் அரசியல்வாதிகளே ஆகும்.

இந்நிலையில் இலங்கையில் சமாதானம் ஒன்று உருவாவதற்கும், அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கும் முத லில் மனம் மாற வேண்டியவர்களும், அதனை முன்னெ டுத்துச் செல்ல வேண்டியவர்களும் அரசியல்வாதிகளே ஒழிய பௌத்த மத பீடாதிபதிகள் அல்ல. கடந்த காலத் தில் இப்பிரச்சினையை உருவாக்கியதில் பௌத்த பீடங்கள் ஆற்றிய பங்கிற்கு அவர்களின் பங்களிப்பும் கோரப்பட வேண்டுமே ஒழிய அவர்களால் சமாதா னத்தை உருவாக்கவோ அன்றி அபிவிருத்தி செய்யவோ முடியாது.

ஆகையினால், இவ்விடயத்தில் முதலில் மாற்றம் அரசியல்வாதிகளிடம் இருந்தே வரவேண்டும். ஆரிப் பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியி டம் இருந்தே வரவேண்டும். சமாதானம் உருவாகவும், லஞ்சம், ஊழல் ஒழிக்கப்படவும் வேண்டுமானால், முதலில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில் யுத் தமே சிறிலங்காவில் இன்று பெரும் ஊழலுக்கும், லஞ் சத்திற்கும் வித்திட்டுள்ளது. யுத்தம் பல இராணுவ அதிகா ரிகளையும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளையும் கோடீஸ்வரர்கள் ஆக்கியுள்ளது; அத்தோடு அபிவிருத்திக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது.

இந்நிலையில் முதலில் ஜனாதிபதி இனப்பிரச்சி னைக்கான தீர்வு இராணுவத்தீர்வு என்ற நிலைப் பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இது சமாதா னத்திற்கும், ஊழல், லஞ்சம் என்பனவற்றை ஒழிப்பதற் கும் கணிசமான பங்காற்ற முடியும். இம்முயற்சியில் அவர் ஈடுபடும் போது அதில் ஏதாவது தடங்கல்கள் விளையுமானால், அதற்கு அவர் மேலே கோரியது போன்று பௌத்த பீடங்களின் ஒத்துழைப்பைக் கோர லாம், அதை விடுத்து, தான் ஆரம்பிக்க வேண்டிய வேலை ஒன்றை மற்றவர் தலையில் சுமத்துவதும், மற்றவர் தொடங்க வேண்டும் எனக் கூறுவதும், உலகை ஏமாற்றும் முயற்சியாகவே கருதப்படும்.

(கொழும்புத்துறை)
மூன்றாம் இடம்:- சி. யோகராணி (கொழும்புத்துறை)

தும்புத்தடி தயாரித்தல்:-
முதலாம் இடம்:- செ. மனோசங்கர் (கொழும்புத்துறை)
இரண்டாம் இடம்:- ஐ மோகனராசா (கொழும்புத்துறை)
மூன்றாம் இடம்:- கா குணரத்தினம் (அராலி மேற்கு)

குட்டான் இழைத்தல்:-
முதலாம் இடம்:- க. றஞ்சினிதேவி (அராலி மேற்கு)
இரண்டாம் இடம்:- வே. விமலேஸ்வரி (அராலி மேற்கு)
மூன்றாம் இடம்:- கு. விமலாதேவி (அராலி)

விளக்குமாறு தயாரித்தல்:-
முதலாம் இடம்:- கா. குணரட்ணம் (அராலி மேற்கு)
இரண்டாம் இடம்:- சி. செல்லத்துரை (அம்பன், குடத்தனை)

பனைமரம் ஏறுதல்:-
முதலாம் இடம்:- க. கலிங்கேஸ்வரன் (இன்பருட்டி)
இரண்டாம் இடம்:- ந சுதர்சன் (பொலிகண்டி)
மூன்றாம் இடம்:- சி. ஜெகதீஸ்வரன் (அராலி மேற்கு)

நிலம் கொத்துதல்:- (ஆண்கள்)
முதலாம் இடம்:- ம. உருத்திரன் (அல்வாய் வடமேற்கு)
இரண்டாம் இடம்:- ம இராமச்சந்திரன் (அல்வாய் மேற்கு)
மூன்றாம் இடம்:- செ. ஜெயக்குமார் (அராலி மேற்கு)

நிலம் கொத்துதல்:- (பெண்கள்)
முதலாம் இடம்:- சி. ஸ்ரீகாந்திமதி (அராலி மேற்கு)
இரண்டாம் இடம்:- ப. கீதா (அராலி மேற்கு)
மூன்றாம் இடம்:- மா. புஸ்பலதா (அராலி மேற்கு)

உழுதல்:-
முதலாம் இடம்:- க நடராசா (குடத்தனை கிழக்கு)

துலா மிதித்தல்:-
முதலாம் இடம்:- கி சுதாகரன் (அல்வாய் மேற்கு)
இரண்டாம் இடம்:- கி. கிருபாகரன் (அல்வாய்வடமேற்கு)
மூன்றாம் இடம்:- கி விநாயகமூர்த்தி (அல்வாய் மேற்கு)

வள்ளம் தாங்கல்:-
முதலாம் இடம்:- லோ குணசிங்கம் (குழுவினர்) (நாவாந்துறை வடக்கு)
இரண்டாம் இடம்:- சு செபஸ்தியாம்பிள்ளை (குழுவினர்) (நாவாந்துறை தெற்கு)
மூன்றாம் இடம்:- அ மாணிக்கராசா (குழுவினர்) (நாவாந்துறை வடக்கு)

பாய் ஓட்டம்:-
முதலாம் இடம்:- அ அரியராசா (குழுவினர்) (நாவாந்துறை வடக்கு)
இரண்டாம் இடம்: நீ பாலதாஸ் (குழுவினர்) (நாவாந்துறை வடக்கு)
மூன்றாம் இடம்:- லோ. குணசிங்கம் (குழுவினர்) (நாவாந்துறை வடக்கு)

கயிறு திரித்தல்:-
முதலாம் இடம்:- சி செல்லத்துரை (அம்பன் குடத்தனை)
இரண்டாம் இடம்:- கா. குணரட்ணம் (அராலி மேற்கு)

மு. க. சுமார் நான்காயிரத் துக்கு குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற் றுள்ளது. இத் தொகுதியில் இரண்டாமிடம் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. வேட் பாளர் ராமஜெயத்துக்கும் மூன்றாமிடம் இந்திய காங் கிரஸ் வேட்பாளருக்கும், நான்காம் இடம் வை. கோபாலசாமி தலைமையி லான மறுமலர்ச்சி தி.மு.க வேட்பாளர் கலைப்புலிதானு க்கும் கிடைத்துள்ளது

சதையை

'ஸ்ட்ரப்டர் கொகஸ்' என இனம் காணப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கேற்படும் காய்ச் சல் வகைகளைப் பரப்பும் இப் பக்டீரியா, பிரிட்டனில் தான் சதை உண்ணும் பக்டீ ரியாவாக மாற்றமடைந்துள் ளது என தெரிவிக்கப்படுகி றது. ஆனால் இது ஒரு தொற்றுநோய் என்பதற்கு எதுவித ஆதாரமும் கிடை யாது என பிரிட்டிஷ் பிர தான சுகாதார அதிகாரி கூறி யுள்ளார். தோலில் சொறிச் சலை ஏற்படுத்தும் இக் கிருமி ஒரு மணித்தியாலத்திற்கு ஓர் அங்குலம் முன்னேறக் கூடி யது எனவும் நோய் ஏற்படும் பகுதியை சத்திர சிகிச்சை மூலம் பிரித்தெடுப்பதே நோயைத் தடுக்கும் வழியென வும் அவ் அதிகாரி மேலும் கூறினார்.

நேசத்தின்

னித் தொடர்பகப் பொறுப் பாளர் திரு நீதனும் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்

ஒளிவீச்சு குறும்படத்தொகு ப்பினை யாழ் மாவட்ட அர சியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி வெளியிட்டு வைக்க, மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்.

இறுதியில் யேசுராசாவின் மதிப்புரையை அடுத்து, குறும் படங்கள் பார்வையாளர்களு க்கு காண்பிக்கப்பட்டன (தி)

## கரபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட பாடசாலை கள் கரப்பந்துச் சுற்று போ ட்டியில் 19 வயதுப் பிரிவின ருக்கான அரை இறுதிப்போட் டிகள் இன்று முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத் தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியை எதிர்த்து கனக ரத்தினம் மத்திய மகா வித்தி யாலயமும், யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயமகா வித்தியாலயமும் மோதும்.

இலங்கை

வேண்டும் என அரசியல் வட் டாரங்களில் பேசப்பட்ட போதும் இது தொடர்பான மாற்றத்தை எந்த அரசியல் கட்சியும் தெளிவாக முடிவை வைக்கவில்லை என தெரிவிக் கப்படுகின்றது.

பின்தங்கிய

சாலை அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி களுக்கு முன்னுரிமை வழங்க ப்படும் என தெரிவிக்கப்படு கிறது.

கொடி

லூரியிலும், கோப்பாய் கோட் டத்திற்கு அத்தியார் இந்துக் கல்லூரியிலும், கரவெட்டி கோட்டத்திற்கு திரு இருதயக் கல்லூரியிலும், பருத்தித்துறை கோட்டத்திற்கு மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும், மருதங்கேணி கோட்டத்திற்கு செம்பியன்பற்று றோ. க. பாடசாலையிலும், பளை கோட்டத்திற்கு பளை மகா வித்தியாலயத்திலும் நடை பெறவுள்ளது

அனைத்துப் பாடசாலை அதிபர்களும், குறிக்கப்பட்ட நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளனர்.

கோள் விடுத்துள்ளன.

உயர்ந்து செல்லும் ஒவ் வொரு வாழ்க்கைச் செலவு களுடன் ஈடுகட்டும் ரூபா ஐந்து வீதம் அதிகரிக்குமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

## தனிக்குடிசை அமைப்பு

அரியாலை சாம்சன் குடி யிருப்பு மக்களுக்கென தனித் தனி குடிசைகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள் ளன. குடியிருப்பின் எதிரே, வீதியின் மறுபுறத்தில் உள்ள வளவொன்றில் ஆரம்ப கட்ட குடிசைகள் அமைக்கப்படுகின் றன.

குடியிருப்பு தற்போதுள்ள இடத்திலும் கொட்டகைகள் அகற்றப்பட்டு தனிக் குடிசை கள் அமைக்கப்படும் எனவும், ஒரு பகுதிக் குடிசைகள் மணிய ரசன் குடியிருப்பிற்கு அருகில் உள்ள வளவில் அமைக்கப்ப டும் எனவும் குடியிருப்பு வட் டாரங்கள் கூறியுள்ளன.

(22)

தேவையான

புக் கருதி அமைக்கப்பட்ட முகாமைச் சேர்ந்த இராணு வத்தினரே இப் படுகொலை களை மேற்கொண்டவர் என செய்திகள் வெளியாகியிருந் தன எனவே இந்த ஒலிபரப் புக் கோபுரத்தில் கடமை யாற்றும் பலரை இரகசியப் பொலிசார் விசாரணை செய் துள்ளனர் என தெரிய வரு கின்றது

இவ் விசாரணைக்குத் தேவையான 30 படையினரு ரும் சமுகமளிக்காததாலேயே இப் படுகொலை பற்றி விசா ரணைகள் பூர்த்தியடைய வில்லை என சிரேஷ்ட அதி காரி ஒருவர் தெரிவித்துள் ளார்

யாழ் ஸ்ரீதரில்
இன்று மட்டும்
பி. ப. 3. 00 மணி, மாலை 6. 00மணி

**மண்ணுக்காக**

நாளை முதல்
புரூஸ்லி நடித்த

**GAME OF DEATH**

தினசரி பி. ப. 4. 00 மணி, மாலை 6. 00 மணி
சனி, ஞாயிறு காலை 10. 30 மணி,
பி. ப. 4. 00 மணி, மாலை 6. 00 மணி
தினசரி பி. ப. 2 30 மணிக் காட்சி மட்டும்


ஏப்ரல் 94 ஒளிவீச்சு (சி-9548)


## தவறிவிட்டது

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த S R இராமநாதனுடைய அடவுச்சீட்டு, வங்கி பாஸ் புத்தகம் மற்றும் பென்சன் காட் ஆகியன கடந்த வெள்ளிக்கிழமை நெடியகாட்டிற்கும பருத்தித்துறை தேசிய வங்கிக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பருத்தித்துறை மீன் மாக்கற் ஒழுங்கை இளங்கோவன் கடையில் அல்லது வல்வெட்டித்துறை கோழித்தீன் வியாபாரி இரத்தினவேல் கடையில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்,

(8415)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். மறவன்/சுலோஜன்**
**(பாக்கியதுரை தயாளசிலன்)**

பிறப்பு 07. 08. 1968 — வீரச்சாவு 30. 05. 1992

தன்மானம் பெரிதென்று தமிழ் மானம் காக்க

## சீதனம் என்பது அவமானம்
## உழைத்து வாழ்வது தன்மானம்

## 2-ம் ஆண்டு நினைவு நாள்



**கப்டன் பாவாணன்/கெனடி**
**பத்மநாதன் மயூரன்**

மழலை வடிவில்: 8 - 11 - 1970 — மாவீரன் வடிவில்: 30 5 - 1992

கண்ணின் கருமணியே, எம் காதல் குலக் கொழுந்தே,
உன்னை எண்ணும்போதெல்லாம் - அந்த
எண்ணம் இனிக்குதெடா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்
(சி-9549)

அப்பா, அம்மா,
சகோதரர்,
மாமன்மார்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கோட்டத்தில் ஐந்தாம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான மாதாந்த வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7. 30ற்கு ஸ்ரீபன் குடியிருப்பு (யாழ் புகையிரத நிலையத்தில்) இடம் பெறவுள்ளது.

## பணத்திற்காக தமிழர் கொழும்பில் வேட்டை

[கொழும்பு]

கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் கடந்த பதினெட்டாம் திகதியன்று சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்ட பாரிய அளவிலான சுற்றி வளைப்பு தேடுதலின் போது நானூறிற்கும் மேற்பட்ட தமிழர்கள் பால், வயது வேறுபாடின்றி கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்களில் பெரும்பாலோர் தற்போதும் பொரளையிலுள்ள குற்றத் தடுப்பு புலனாய்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், பெருந்தொகை பணத்தை செலவிட்ட சிலர் தப்பித்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது நீர்கொழும்பு மற்றும் கொட்டாஞ்சேனை பகுதிகளிலுள்ள பொலிசாரே இச் சோதனையை மேற்கொண்டிருக்கின்றனர்.

இச் சோதனைகளின் நோக்கம் தமிழர்களிடமிருந்து பணம் பறிப்பதாகவே இருந்து வருகிறது எனவும் கூறப்படுகிறது.

# தேசத்தின் நிகழ்வுகளைக் காட்டும் படைப்புகள் வெளிவர உதவவேண்டும்

## குறும்பட விழாவில் கரிகாலன் உரை

(யாழ்ப்பாணம்)

எமது தேசத்தில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஊடாக தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் நடைபெறும் நிகழ்வுகளை அனைவரும் அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு ஒளிவீச்சு ஓராண்டு நிறைவையொட்டி நடைபெற்ற குறும்பட விழாவிற்கு தலைமை வகித்துப் பேசும் போது தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு கரிகாலன் குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நேற்று மாலை இடம் பெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசும்போது,

இங்கு தயாரிக்கப்பட்டுள்ள குறும்படங்கள் யாவும் போராட்டத்தைச் சித்திரிப்பனவாக உள்ளன

மக்களின் துன்பம், மக்கள் போராட்டத்திற்கு வழங்கும் ஆதரவு போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான கலைப்படைப்புகள் எதிர்கால சந்ததி பார்த்து அறிவதற்கு உதவும். இந்தவிதமான ஏராளமான படைப்புகள் வெளிவருவதற்கு மக்கள் உதவ வேண்டும் என்றார்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அங்கு சிறப்புரை ஆற்றும் போது,

எங்களால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்ற இறுக்குவிடுதலைப் புலிகளுக்கு உண்டு. நாம் பலம் உள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர்களாக, வளர்ந்துவருகிறோம் எமது போராளிகளின் வளர்...

...லாம் என்றார்

நிதர்சனம் பொறுப்பாளர் திரு தமிழன்பன் அங்கு உரை நிகழ்த்தும்போது,

இங்கு தயாரிக்கப்படும்குறும்படங்கள் தமிழீழத்தில் மட்டுமல்ல; கடல் கடந்த பல நாடுகளிலும் காண்பிக்கப்படுகின்றன

எமது போராட்டத்திற்கு எதிரானவர்களால் உலக ரீதியில் எமது போராட்டம்பற்றி பிழையான விதத்தில் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன

நாம் இங்குள்ள நிகழ்வுகளை வெளிப்படுத்துவதன் மூலமே அவர்களின் நோக்கை இல்லாதொழிக்க முடியும்

எமது தலைவர் இந்த ஒளிவீச்சு தயாரிப்பிலும், குறும்பட வெளியீட்டிலும் அவாவுற்றிருக்கின்றார். அவர் தமது பெறுமதி மிக்க நேரத்தைச் செலவழித்து இவற்றைப் பார்வையிடுகின்றார்.

வெளிநாட்டவர்கள் எமது போராட்டத்தை ஒளி வீச்சில் கண்டு வியப்படைகின்றனர்.

இதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தின் நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்படுகின்றன. இதற்கு குறும்படங்கள் சாதனமாகி விடுகின்றன.

முன்னதாக விழா மேடையில்மகளிர் அமைப்பைச் சேர்ந்த சுபங்களாவும், வல்...

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் துரைச்சாமி

சுப்பிரமணியம் துரைச்சாமி 29 - 5 - 94 அன்று காலமாகிவிட்டார் இவர் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் காலம்சென்ற அகிலன் (அன்ரனி 2-ம் லெப். மாவீரன்), நர்மதா, சங்கீதா (போராளி), துஜிதா, திலிபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் சின்னத்தங்கச்சியின் சிரேஷ்ட புத்திரனும் தி. வரதலக்சுமி (ஆசிரியை புனித மரியாள் வித்தியாலயம்), சீதாலக்சுமி (ஆசிரியை யா.இ.ஆரம்பபாடசாலை), விஜயலக்சுமி, கண்ணன் (தனு ஸ்ரூடியோ), கலாஜனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருஞானசம்பந்தன் (பண்ணிசைஆசிரியர்), குகனேஸ்வரன், சிற்சபாநாயகி (ரேவதி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார், சோபி, துவா ஆகியோரின் மாமனாரும் தனுஸன், லவண்யா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 30 - 5 - 94 இன்று பி. ப. 2. 00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்

தனிமானம் பெரிதென்று தமிழ் மானம் காக்க
புறப்பட்ட மறவா மணலாற்றுச் சமரிலே
காவியம் படைத்து விட்டாய்
நீ மறைந்து ஈராண்டு சென்றாலும்
உன் இலட்சியங்கள் வாழும்

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

உரும்பராய் தெற்கு, - குடும்பத்தினர்.
உரும்பராய். (8412)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் செல்வன்

**(செல்லத்துரை தெய்வசமாதாதன்)**

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 03. 02. 1968 | 30. 05. 1992 |

**உங்கள் கனவுகளில் - எங்கள்**
**பாதங்கள் தொடரும்.**

புலோப்பளை மேற்கு, **- குடும்பத்தினர்'**
பளை. (சி-9542)



## வீரவேங்கை வேல்மாறன்

ஐயாத்துரை மனோகரன் (சுதா)
(அல்வின் வீதி, காரைநகர்)

| காரை மண்ணில்: | கட்டுவன் மண்ணில்: |
|---|---|
| 21 - 04 - 1975 | 30 - 05 - 1992 |

ஆண்டுகள் இரண்டானதே - அன்பு மகன்
வேல்மாறனின் நினைவுகள் ஒன்றானதே
மீண்டும் இவ்வையகம் வந்திடுவாய்,
எங்கள் மகனுடன் சங்கமித்த 11 மாவீரர்களுக்கும்
எங்கள் அஞ்சலிகள்.

சங்கரத்தை வீதி, அப்பா, அம்மா,
வட்டுக்கோட்டை. சகோதரர்கள், நண்பர்கள்.
(8419)

களாக, வளர்ந்துவருகிறோம் எமது போராளிகளின் வளர்ச்சி அபரிமிதமானது

இந்த வகையான கலைவடிவங்கள் யாவும் கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுபவை. எல்லா துறைசார்ந்தவர்களின் உச்சங்களைச் சேர்த்துக் கொண்டால் தயாரிப்பு சிறந்ததாக இருக்கும்.

இங்கு நிறையக் கதைப்பவர்களால் செய்ய முடிவதில்லை. கொஞ்சப் பேர்தான் செய்கிறார்கள். இதனை ஒரு குறையாக நான் சொல்லவில்லை.

இந்த அனைத்துப்படங்களிலும் போராட்டத்தின் எச்சங்களாக மிஞ்சியிருக்கப் போவது, இந்த மண்ணிற்கு வழங்கப்பட்ட வீரமும் தற்கொடையும் தான்

எத்தனை காலத்திற்குக் கலைப் படைப்பு உருவாக்கங்களை போராளிகளின் கைகளிட விடப்போகின்றீர்கள்

பாட்டுப் பதிவதும், பத்திரிகை நடத்துவதும், படம் எடுப்பதும் எத்தனை நாட்களுக்கு எம்மிடம் விட்டு வைக்கப் போகின்றீர்கள்? நீங்கள் கொஞ்சம் பளுவைச் சுமக்கத் தயாராக மாட்டீர்களா?

நிதர்சனம், கலை பண்பாட்டுக் கழகம் சார்பில் கேட்கின்றேன் இந்தப் பொறுப்பின் சுமையை நீங்கள் குறைக்கக் கூடாதா? பாரத்தை நீங்கள் கொஞ்சம் அள்ளிக் கொள்ளக்கூடாதா?

அடுத்த நேரச் சாப்பாட்டிற்கு வழியில்லாத நிலையில், 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்?' என்று பாடினானே பாரதி, அவன் தான் கலைஞன்.


இந்த மண்ணில் பிறந்ததற்காகவே நாமெல்லாம் பெருமைப்படலாம் இங்குள்ள கொடுமைகளைப் பார்த்துக் கொண்டு குந்திக் கொண்டு எமது கலைஞர்கள் இருக்கக் கூடாது.

எல்லாமாகி நாம் எல்லோரும் நின்றால் எமது போராட்டத்திற்கு அதிக வயது ஏற்படுவதற்கு முன்னமே நாம் விடுதலையைப் பெற்று விட

படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல 6, விபுலானந்த வீதி, - குடும்பத்தினர்
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம் (8420)

# நினைவஞ்சலி



தோற்றம்;
15 08 - 1938

சிவபதம்;
21 - 05 - 1994

## பிரம்மஸ்ரீ ச. கௌரிசங்கர சர்மா
## (நவிண்டில் ஐயா)
**ஆவரங்கால்**

அச்சுவேலி, தோப்பு போதிப்பிள்ளையார் ஆலயத்தில் 25 வருடங்களுக்கு மேலாக அர்ச்சகாசாரியராக இருந்து வந்த ஐயா அவர்கள் இந்தியப் படை வந்த காலத்திலும் ஊரடங்கு வேளையிலும் விநாயகரது பூஜையினைத் தவறாது செய்த கடமை வீரர்.

ஆலயத்தில் வழிபடுபவர்களின் பெயர் நட்சத்திரம் யாவற்றையும் நினைவுவைத்திருக்கும் அளவிற்குப் பிள்ளையாரின் அருள் கிடைக்கப் பெற்றவராவார்.

மூன்று தலைமுறைகளைக் கண்டுள்ள இவர் இல்லறக் கிரியைகளைச் சிறப்புற நடத்திக் கிராம மக்களின் அன்பைப் பெற்றமை அன்னாரது இறுதி அஞ்சலியின் போது காணக் கூடியதாக இருந்தது

அவரது ஆத்மசாந்திக்காக விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

தோப்பு - போதிப்பிள்ளையார் ஆலய நிர்வாகம்,
இந்து இளைஞர் மன்றம், கிராம மக்கள்.
30-05-94 (8407)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது